# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 11 ஞாயிற்றுக்கிழமை (27-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்:259



பொது சன நூலகம்
27 SEP 1998
மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்


# மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதி ஒக்.4 இல் யாழ். வருகிறார்!

## காணாமற்போனவர்கள் குறித்து முதலில் வாக்குமூலங்கள் பதிவாகும்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 27

செம்மணி புதைகுழிவிவகாரம் மற்றும் காணாமற்போனோர் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒக்ரோபர் 4 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் ரி. சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் வருகிறார்.

செம்மணி விவகாரம் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்ய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து ஆணையாளர் ஒருவரை யாழ்ப்பாணம் அனுப்புவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஒ. எஸ். எம். செனிவரத்ன உறுதி அளித்திருந்தார்.

மனித நேய அமைப்புகள் நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய மறியல் போராட்டத்தை அடுத்தே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வரும் முன்னாள் நீதியரசர் ரி. சுந்தரலிங்கம் முதலில் காணாமற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்குள் வரும் வாகனங்களை சோதனையிட நவீன கருவிகள்

### அமெரிக்க நிபுணர் உதவியும் பெறப்படும்

கொழும்பு, செப். 27

வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்பு நகருக்குள் வரும் வாகனங்களைச் சோதனையிடுவதற்காக நவீன கருவிகளுடன் விசேட சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்புக்கு வரும் பிரதான வீதிகளில் அமைக்கப்பட உள்ள இந்தச் சோதனைச் சாவடிகளில் நவீன உபகரணங்களுடன் விசேட பயிற்சி பெற்ற படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

கொழும்பிலுள்ள பிரதான வீதிகளில் ஏற்கனவே பல சோதனைச் சாவடிகள் உள்ள போதிலும் இனி அமைக்கப்பட உள்ள சோதனைச் சாவடிகள் நவீன மயமானவையாக இருக்கும் எனவும்—

அமெரிக்காவிலிருந்து வெடிப்பொருள்கள் தொடர்பான நிபுணர்கள் குழு ஒன்று கொழும்பு வந்து புதிய சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் எனவும்— அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. (இ- 10-7-9)

## வடக்கு-கிழக்கில் மோதல்கள்

கொழும்பு, செப். 27

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் பரவலாக மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சியில் பாதுகாப்புப் படையினரின் முன்னணி நிலைகளுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவ முற்பட்டதாகவும் —

முன்னணிக் காப்பரண் ஒன்றின் மீது கைக்குண்டுகளால் தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் கிளிநொச்சியில் குரக்கன்காடு என்னும் இடத்தில் படையினர் பதுங்கியிருந்து விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம் வாகரையிலும் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டம் சோளன்காடு என்னும் இடத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

## வாந்திபேதி நோயாளர்களுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பிரிவு

### நேற்று முதல் இயங்குகின்றது

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். போதனா வைத்தியசாலையில் வாந்திபேதி நோயாளர்களுக்குத் தனிச் சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வாந்திபேதி நோயாளர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக இந்தப் பிரிவு நேற்று முதல் இயங்கி வருகிறது.

வாந்திபேதி நோயாளர்களைக் கவனிப்பதற்காகத் தனியான தாதியர்கள், சிற்றூழியர்களும் இங்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சிகிச்சைப் பிரிவில் நேற்று வாந்திபேதி நோயாளி ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் (வயது 19) என்பவரே இந்த நோயாளி ஆவார்.

இதேவேளை காரைநகரில் இருந்தும் மற்றொரு வாந்திபேதிநோயாளி நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் வேரப்பிட்டியைச் சேர்ந்த சற்குணராசா சாந்தரூபி (வயது 2) என்ற குழந்தையே இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரியில் இந்திய மீனவர் சடலம்

### பொலீஸார் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், செப். 27

இந்திய மீனவரினது என்று கூறப்படும் சடலம் ஒன்று நேற்று மாலை காங்கேசன்துறைப் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவரின் பெயர் கோவிந்தராஜ் சங்கர் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கடற்பிராந்தியத்தில் இலங்கையின் கடல் எல்லைக்குள் வந்த சமயம் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த மீனவர் கொல்லப்பட்டதாகவும் —

படகில் அப்பொழுது இருந்த ஏனைய ஐவர் கைதாகி இருப்பதாகவும் — உயிரிழந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட போது தெரிவிக்கப்பட்டது.

சடலத்தின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பொருட்டும் மரணவிசாரணையின் பொருட்டும் சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-139-15)

## பொலீஸ் சோதனை சாவடியில் குண்டு வெடிப்பு

### ஏறாவூர் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர், வம்மியடி பொலீஸ் சோதனைச் சாவடியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

குறித்த நேரத்தில் வெடிக்கும் மேற்படி குண்டு முன்கூட்டியே வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

எனினும் பொலீஸ் சோதனைச்சாவடியில் சோதனைக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான மினிபஸ் ஒன்றின் கண்ணாடிகள் அதிர்வு காரணமாக நொருங்கின.

அருகில் இருந்த கடை ஒன்று சிறிது சேதமடைந்தது. இக்கடையில் இருந்த குடும்பப் பெண் ஒருவர் காயம் எதுவுமின்றித் தப்பினார். (இ-7-21)

## பிரதேச சபைத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

### புத்தளத்தில் சம்பவம்

கொழும்பு செப். 27

புத்தளம் ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச சபைத்தலைவர் கிங்ஸ்லிசரத் ஹேமச்சந்திரா நேற்று முன் தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான இவர் திருமணவீடொன்றுக்கு சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இவர் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில் கிரனேட் ஒன்றும் மீட்கப்பட்டது என சிலாபம் பொலீஸார் தெரிவித்தனர். (இ-21)

## கூட்டணிப் பொதுச்சபை 5 ஆம் திகதி கூடுகின்றது

### முக்கியவிடயங்கள் ஆராய்வு

கொழும்பு, செப். 27

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச் சபை எதிர் வரும் 5 ஆம் திகதி கொழும்பில் கூடவிருக்கின்றது.

யாழ். மாநகர முதல்வர் பதவி இனப்பிரச்சினை விடயத்தில் அரசு காட்டும் இழுபறி நிலை குறித்தும் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரியவருகிறது.

அதேவேளை யாழ். மாநகர முதல்வர் பதவியை உடனடியாக நிரப்புவதில்லை. தற்போதைய உதவி மேயர் ரவிராஜ் அதுவரை பதில் மேயராக கடமை ஆற்றுவார் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் செய்வதற்கில்லை என கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச சோதிட வகுப்பு

யாழ்ப்பாணம், செப் 27 இலங்கை தமிழ் சோதிட ஆய்வு ஒன்றியம் நடத்தும் இலவச சோதிட வகுப்பு இன்று பிற்பகல் 2 மணிக்கு இல. 308, யாழ் — காங்கேசன்துறை வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள மாணவர்கள் இவ்வகுப்பில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

உ

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு

## ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்

(காளி கோயில்)

### பரிபாலன சபை

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில் (காளி கோயில்) வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் 27, 09. 98 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற இருந்து; தவிர்க்க முடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் பற்றிய திகதி பின்னர் அறியத்தரப்படும்.

அ. இராசையா
-தலைவர்

(59457)

## MODERN EDUCATION CENTRE

NELLIADY.

**A/L 98 Day Class**

27 – 09 – 98 Sunday

Zoology - Mr. KENGATHARAN
2. 00 p. m.

Botany - Mr. BALA
1. 00 p. m.

(C/4995)

## யாழ்ப்பாண கல்வி நிலையம்

22, இராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

வடக்கு — கிழக்கு மாகாண சபை

கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவி II 'ஆ' தரத்தில் ஆள்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 1998

மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

ஆரம்பம்: 27—09—98 ஞாயிறு
முற்பகல் 10. 00 மணிக்கு

★ மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர், விளையாட்டு அலுவலர் பரீட்சைகளுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.

- நிர்வாகி

(59469)

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணவேணி இராஜ்குமார்

பருத்தித்துறை பூதவராயர் கோயில் ஒழுங்கையைச் சேர்ந்தவரும் கொழும்பு அன்டர்சன் தொடர்மாடி M/9 இல் வசித்தவருமாகிய திருமதி கிருஸ்ணவேணி இராஜ்குமார் 24-09-98 அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்ற இராஜ்குமார் (தொலைத்தொடர்பு பிரதம பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. திருமதி இராசையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், இராஜ் மோகன் (இலங்கை சுங்க திணைக்களம்), இராஜ் அனந் (லண்டன்), இராஜ் இராணி (லண்டன்), இராஜ் வசந்தி (லண்டன்), இராஜ் ஜெயந்தி (பிரான்ஸ்), இராஜ் சுசந்தி (லண்டன்), இராஜ் சுமதி (லண்டன்), இராஜ் நளினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாணிக்கவதனி, இராஜரட்ணம், ஜெகன்நாதன், உருத்திரகுமார், யோகேந்திரன், ஜெயக்குமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இராஜ்பிரியதர்சினி, இராஜ் ரமணன், இராஜ் ராகவன், இராஜ்பிரசன்னா, இராஜ் பிரதீபன், இராஜ் கிருஸ்ணா, இராஜ் பிரவீன், பிரகாஷ், அசோக், நிரோஷ், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-09-98 இன்று நண்பகல் 12-00 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 3-00 மணிக்கு பூதவுடல் அன்டர்சன் தொடர்மாடி M/9, இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக பொரளை பொது மயானத்துக்கு (கனத்தை) எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்,
இராஜ்மோகன்
(மகன்)

(59458)

## முன்பள்ளி கல்வி நிலைய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 27

வண். வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளி கல்வி நிலைய முதலாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு வண். வடமேற்கு ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலக உதவி பிரதேசசெயலர் எஸ். வேல் முருகோன் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(இ-7-100)

## கபிரியேல் மின்சாரம்

SUPRA RELIVER OF PAIN

விரைவான நோவு,
வேதனா சாந்தி
எட்வேட் சுதேச
மருத்துவ நிலையம்
24, பஸ் நிலையம்,
யாழ், நகர். (59437)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
மூன்று நாள்கள் மட்டும்
சத்தியராஜ்
(இரு வேடம்)
கஸ்தூரி, சுஜாதா
நடித்த
அமைதிப்படை
30 - 09 - 98 முதல்
றோஜா
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4997)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
தேசியவிருது பெற்ற
சிவாஜி - ராதா
சத்தியராஜ் நடித்த
முதல்மரியாதை
( ரீலஸ் )
காட்சி: 10-30. 2-30
(59466)

## விற்பனைக்கு

வெல்டிங் பாவனைக்கு உகந்த 5 K W. ஜெனரேட்டர், கரண்ட் டிறில்லர், வெல்டிங் பிளான்ட் டிரான்ஸ்போமர், கிரான்டர், ஹான்ட் டிறில்லர், கொம்புப்பட்டடை பிடிசிராவி ஆகியவை உடன் விற்பனைக்கு உண்டு.

இ. கண்ணன்
இல 860 / 3,
பருத்தித்துறை வீதி,
செட்டியார் தோட்டம்,
நல்லூர்
(59465)

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
கணக்கியல்
A/L 2000
தனிவியாபார
முடிவுக் கணக்கு
ஆரம்பம்:
திங்கள் 4-00 p. m.
ஆசிரியர்:
திரு. சி. தவா
(59468)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை யோசப்

(ஈழநாடு)

இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னத்துரை யோசப்பாலச்சந்திரன் (ஈழநாடு) 26-09-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை – அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேந்திரன், சரஸ்வதி, தவராணி, அக்னஸ் (பேபி) மகேஸ்வரி, சாந்தினி, சறோஜினி, றவீந்திரன், றஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளையின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று 27-09-98 பிற்பகல (பழைய நேரம்) 4 00 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி மகேந்திரன்
(சகோதரன்)

215/9, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(59454)

### திருமதி கதிரைவேற்பிள்ளை புவனேஸ்வரி

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த திருமதி கதிரைவேற்பிள்ளை புவனேஸ்வரி 25—09—98 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற நீதிமன்றப் பதிவாளர் பொ. கதிரைவேற்பிள்ளையின் அன்புத் துணைவியாரும், நடேசன், ஆனந்த நடேசன், தில்லை நடேசன், காலஞ்சென்ற திருமதி துரைராசா பரமேஸ்வரி மற்றும் சிவாம்பிகை, பர்வதபத்தினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், இலட்சுமிப்பிள்ளை, செல்லம்மாள், சரோஜினிதேவி, துரைராசா, கந்தசாமி, பொன்னையா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பொ. அரவிந்தன்
(பேரன்)

நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

(59444)

திருமதி

### பிரான்சிஸ்கா அகஸ்ரீன்

(முத்தம்மா)

கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ்கா அகஸ்ரீன் 26-09-98 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற அகஸ்ரீனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி கிரேஸ் லோறன்ஸ் மற்றும் செல்வராஜா, திருமதி வினிபிரெட் அருளானந்தம் (ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ப. லோறன்ஸ் (யாழ். ப. நோ. கூ. ச), ஞா. ஆ. அருளானந்தம் (தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமியாரும், டிலானி, சிராணி, அரவிந்தன், வினிநர்மதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 28-09 98 நாளை திங்கட்கிழமை பி. ப. 3-30 மணிக்கு (புதிய நேரம்) அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி வி. அருளானந்தம்
(மகள்)

இல: 21, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(59463)

### சுப்பிரமணியம் நாகரத்தினம்

வட்டு, கிழக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நாகரத்தினம் 25. 09. 98 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்வரத்தினம் (முன்னாள் வடமாகாண பணிப்பாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபை) இந்திராணி, கலாமாலினி (ஆசிரியை முஸ்லீம் மகாவித்தியாலயம், வவுனியா, தற்பொழுது கல்வித்திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாக்கியலட்சுமி செல்லையா (இளைப்பாறிய ஆசிரியை), காலஞ்சென்ற திருமதி பொன்னாபரணம் பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி தங்கம்மா, மாரிமுத்து (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதாகரன், செல்வகுமாரி, பக்தகௌரி, தாமரைச்செல்வி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி செ. தங்கம்மா
[மருமகள்]

40/3, புகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[59466]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## ஞானம், வல்லமை தருவதற்கு
# சக்திகளைச் சேர்ப்பவள் சரஸ்வதி

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர் விக்கும் தெய்வமாக விளங்கு பவள் அன்னை சரஸ்வதி. ஞானங்களுக்கெல்லாம் இவளே நாயகி. வெள்ளைக் கலையுடுத்து புத்தி, கல்வி, வாக்கு ஆகியவைகளுக்குத் தலைவியாய் வெண்டாமரை யில் எழுந்தருளி வீணை ஏந்திய கையுடன் வீற்றி ருப்பாள். தன்னைப் போற்று பவர்களின் அறியாமையை நீக்குவது இவளது கருணை விளையாட்டு. இதனாலேயே அறிவினால் இயங்கும் நிலை யங்கள் தோறும் அன்னைக்கு விழா எடுக்கப்படுகிறது.

இறைவனைத் தாயாக வணங்கும் பெருமை இந்து தர்மத்தின் சிறப்பை உணர்த் துவதாகும். அந்த உறவில் அமைதியும் ஆனந்தமும் பிறக்கிறது. இந்தப் பேரா னந்த உறவைப் பலப்படுத் தும் நாள்கள் நவராத்திரி நாள்கள். இந்நாள்களில் சக்தி பூசையினால் மகிழ்ச்சி யடைகிறது நம்நாடு. வீரம், செல்வம், கல்வி என்பவற் றால் சிறப்புப் பெற்ற நாடு நம் நாடு. எல்லாவற்றுக்கும் முதல்வியாகிய சக்தி, கலை மகள், திருமகள், கொற்றவை என மூவராய் நிற்கிறாள்.

கலைமகளது திருவருளைப் பெற்றுக் கல்வியிற் சிறந்து விளங்கினோர் பலர். கவிச் சக்கரவர்த்தி கம்பநாடரும் கலைமகள் திருவருள் பெற்றே சிறப்புற்றார் எனக் கூறப்படுகிறது. குமரகுருபரர் சுவாமிகளும் கலைமகள ருள் பெற்று மொகலாய மன்னனுடன் உரையாடிப் பெருமை பெற்றார்.

''பண்ணும் பரதமும்
கல்வியும் தீஞ்சொற்
பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி
தெய்த நல்காய்''

என்று கலைவாணியிடம் வேண்டி நிற்கிறார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியும் பக்தியோடு பரவு கிறார்.



''வேதத் திருவிழியாள்
 - அதில்
மிக்கபல்லுரையெனும்
 கருமையிட்டாள்
சீதக் கதிர்மதியே
 - நுதல்
சிந்தனையே குழல்
 என்னுடையாள்
வாதந் தருக்கமெனும்
 - செவிவாய்ந்த
நற்துணிவெனும்
 தோடணிந்தாள்''
''போதமென் நாசியினாள்
 - நலம்
பொங்கும் பல்சாத்திர
 வாயுடையாள்
கற்பனைத் தேனிதழாள்
 - சுவைக்
காவிய மெனுமணிக்
 கொங்கையினாள்''

இவ்வாறு பல வகையில் அன்னை கலைமகளின் திரு வுருவை பாரதியார் வர்ணிக் கிறார்.

நவராத்திரி இறுதி மூன்று தினங்களும் மகா சரஸ்வதிக் குப் பெருவிழா எடுக்கின் றோம். ஏனெனில் இவளே பிரபஞ்சத்தை நிர்வாகம் செய்பவள். ஒவ்வொரு சிறு துறையிலும் இறங்கி சக்தி களின் ஒத்துழைப்பைக் கூட்டிவைப்பது சரஸ்வதியின் கடமை.

மனித வாழ்க்கை என்ற வீணையை மீட்டிக் கொண் டிருக்கிறாள். அதைப் பேரின் பத்தோடு சுருதி சேர்க்கின் றாள். நாம் அவளை விரும் பித் தியானம் செய்யும் பொழுது அவள் வீணை ஒலி எம்முள் ஒலிக்கிறது. ஞான மும் வல்லமையும் எம் இத யத்தில் இறங்குகின்றன. அங் கிருந்து பூலோகத்துக்கு அவை பாய்ச்சப்படுகின்றன. இதனால் விண்ணும் மண் ணும் இணைந்து காட்சி தரு கிறது. இவற்றை அக அனு பவத்திற் கண்டு கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் வழி காட்டுகின்ற நாள்கள் நவராத்திரி தினங்களேயா கும். ★

*துர்க்கா துரந்தரி*
*தங்கம்மா அப்பாக்குட்டி*

## எதிரொலி!

● பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை யொன்றில் அரிசி மூடைக்குள் பாம்பு இருந் தது கண்டு பிடிக்கப்பட்டது.

★ அது பாம்பாக இருக்காது; நீண்ட நாள் அரிசிக்குள்ளே கிடந்து அந்த அரிசியைத் தின்று கொழுத்த ''புழுவாக'' இருக்கும் என் கின்றார் நிவாரணமாக அரிசியைப் பெறும் அகதி ஒருவர்.

● கொழும்பிலுள்ள வடிகால்கள் பற்றிய விவரமான வரைபடங்கள் விடுதலைப் புலிகளிடம் இருக் கின்றனவாம்.

★ வடிகால்கள் இனி ''வெடி'' கால்களாகி விடுமோ என்ற கெடிக் கலக்கத்தில் பலருக்கு நித்திரையே வராது!

● செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் அரசு வேண்டுமென்றே காலதாமதம் செய்கின்றது என்ற குற்றச் சாட்டுப் பலரால் முன்வைக்கப் படுகின்றது,

★ செம்மணிக்கு விரைவாக வந்துவிட வேண் டும் என்பதற்காகத்தான் வவுனியா – கிளி நொச்சிப் பாதையைத் திறக்கும் சண்டை யில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றோம் என அரசு சமாதானம் சொல்லக்கூடும்!

● யாழ். ஆஸ்பத்திரியில் மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது.

★ அதாவது, மருந்து அங்கே 'மருந்துக்கும் கிடையாது'!

● திருகோணமலை லிங்க நகர்ப் பகுதியிலிருந்து அங்குள்ள தமிழ் மக்களை வெளியேறுமாறு படை யினர் உத்தரவிட்டுள்ளனராம்.

★ ''லிங்க'' நகர் இனிச் ''சிங்க'' நகர் ஆகி விடுமோ எனப் பலர் பயப்படுகின்றனர்.

● ஒரு வாரச் சம்பளத்தைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்குமாறு அரச திணைக்களங்களுக்குச் சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

★ அது ''காரச்'' சுற்று நிருபம்!

● எழுத்தாளர் சல்மான் ருஷ்டி மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை என ஈரான் அதிபர் கதாமி அறி வித்துள்ளார்.

★ ருஷ்டி அவர்கள் இலக்கிய சிருஷ்டியில் இனி வேகமாக ஈடுபடக் கூடும்.

● குடாநாட்டுக்கு கப்பலில் ஏற்றப்பட்ட சாராயம் பறிமுதல்.

★ கப்பல் தள்ளாடாமல் போகவேண்டும் என் பதற்காக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையோ?

– இடியன்.

# உங்களுடைய குழந்தைகள் கவனம்!

இறப்பு எல்லோருக்கும் பொதுவானது தான், வய தானவர்களைப் பொறுத்த மட்டில் பரவாயில்லை; குழந்தைகளைப் பொறுத்த மட்டில் இறப்பு உள்ளத்தை உலுக்கும் நிகழ்வாக அமைந்து விடுகின்றது.

சிலநாள்களுக்கேனும், சிறு நோய்தானும் வராது ஒரு நாள் காய்ச்சலில் குழந்தை கள் மடியும் போது பெற் றோர்கள் பெரும் வேதனை யில் மூழ்கி மீளமுடியாது தவிக்கின்றனர்.

டாக்டரிடம் கூட்டிச் செல் வதற்கு முன்னரே மடியும் குழந்தைகளுக்கு என்ன வியாதி என்று வைத்தியர் களால் கூற முடியாதுள்ளது. அவர்கள் அனுமானத்தில் ஏதேனும் கூறினாலும், ஆய் வுக்குட்படாத நிலையில் சரியான வருத்தத்தை அறிய முடியாதுள்ளது.

இது எவ்வாறிருப்பினும், சிறுபிள்ளைகள் விடயத்தில் பெற்றோர்கள் மிக விழிப் பாக இருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற் றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

சில குடும்பங்களில் குழந் தைகள் பசி பட்டினியுடன், பால்மா இல்லாத நிலையில், சுகாதாரம் அற்ற சூழ் நிலை யில் வாழ்கின்றனர். வெயில் பட்டாலும், மழைபட்டா லும் பொதுவாக அவர் களுக்கு நோய் வருவதில்லை. ஏதாவது நோய் ஏற்பட் டாலும் பெற்றோர்கள் அதனை பெரிதுபடுத்துவதும் இல்லை. வியாதி தானாக மாறி விடுகிறது.

ஆனால் சில குடும்பங்களில் பிள்ளைகளுக்கு நோய் என் றால் உடனே வைத்தியரை நாடுவார்கள். அடிக்கடி இந்தப்பிள்ளை களுக்குத் தான் வருத்தம் வருவதுண்டு. இப்பிள்ளை களே நிறைய மருந்து வகை களையும் குடித்துத் தள்ளு கின்றனர். பெற்றோரும் பெருமளவு பணத்தை இதற் காக இறைக்கின்றனர்.

ஐந்து வயதுவரை பிள்ளை களை வளர்த்தெடுப்பதற்கு பெற்றோர் படாதபாடுபடு கின்றனர். எவ்வளவு அவதா னமாக இருந்தாலும் சில வேளைகளில், இப்பிள்ளை கள் தவறி விடுகின்றனர்.

பெற்றோர் தமது குழந் தைகள் விடயத்தில் மிக அக் கறையாகவும், விழிப்பாக வும் தமது பிள்ளைகளை தாங்கள் பராமரிக்கின் றோம் என்ற எண்ணத் துடன் பல பிழையான கரு மங்களை ஆற்றுகின்றனர்.

**சி. மகாலிங்கம்**

### வைத்தியரின் ஆலோசனை தேவை

பிள்ளைகளுக்கு நோய் ஏற்பட்டதும் ஏற்கனவே வாங்கி வைத்த மருந்து களை சில பெற்றோர்கள் கொடுக்கின்றனர். வைத்தி யரின் ஆலோசனையின்றி வழங்கப்படும் மருந்தால் பிள்ளைகளுக்கு சிலவேளை களில் பெரும் ஆபத்துக்கள் ஏற்படும் என்பதனைச் சில பெற்றோர் உணர்வ தில்லை. உட்கொள்ள வேண் டிய மருந்தின் அளவுகள் பழுதடைந்து காலாவதியா கும தன்மை தகுந்த வெட்ப தட்ப நிலையில் அதனைப் பாதுகாப்பாக வைத்திருத் தல் போன்ற அம்சங்களைப் பெற்றோர் உணர்வதில்லை.

சிறுபிள்ளைகள் விடயத் தில் நோய் அறிகுறி தென் பட்டால், உடனடியாக வைத்தியரை அணுகி, அவ ரின் ஆலோசனைப்படியே மருந்து வகைகளை பிள்ளை களுக்கு கொடுக்க வேண்டும். அது மட்டுமன்றி ஒரே இடத் தில். ஒரே வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதன் மூலம் பிள்ளையைப் பற்றிய முழு மையான தன்மையை எல்லா வேளைகளிலும் டாக் டர் இலகுவாக இனம் கண்டு கொள்ள முடியும்.

பல வைத்தியர்களிடம் மாறி மாறி ஓடித்திருந்து அவல நிலைக்கு ஆளாகா மலும் ஒரே வைத்தியரை இனங் கண்டு, அவரிடம் தொடர்ந்து வைத்தியம் பெறும் பெற்றோராக தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வாறு செய்; அவ்வாறு செய்யாதே!

★ அறிவாளியாக இரு —ஆனால்
ஏமாளியாக இராதே.
★ காளையாக இரு—ஆனால்
கோழையாக இராதே.
★ காவி உடைபோடு — ஆனால்
பாவி என நாமம் தரியாதே.
★ குற்றம் கண்டால் கொதித்தெழு— ஆனால்
சுற்றம்தனை மறக்காதே.
★ கோபத்தைக் காட்டினாலும் கூட—அது
ஆபத்தாக மாறாமல் காத்துக்கொள்.
★ உபதேசம் செய்—ஆனால்
ஊருக்கென நினைத்திடாதே.
★ உற்றுக் கேள் நல்லதை— ஆனால்
ஒற்றுக் கேட்காதே.
★ கம்பைக் காட்டித் தெம்பைவளர்க்காதே;
அன்பைக் காட்டிபண்பைவளர்.
★ உறவை வை—ஆனால்
பறியைக் வைவிடாதே.
★ காதல் செய்வதற்குத் துணிந்தால்
தோல்வியேல் சாதல் செய்யாதிருக்க உறுதிகொள்.

— அருள் திரு. கு. ஐ. குமரேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்திய ஒளி பகவான் சீரடி சாயி பாபாவின் அவதார தின மலர்

இன்று 27-9-98 ஞாயிற்றுக்கிழமை சீரடி பாபா அவதார தினத்தை முன்னிட்டு சீரடி சாயி, சத்தியசாயி அவதாரங்களின் பாத கமலங்களுக்கு சாயி அன்பர்கள் பணிவாகச் சமர்ப்பிக்கும் மலர்.

## சீரடி சாயிபாபாவின் மகிமை

நிஜாம் இராஜ்யத்தில் நகரத்தின் நாகரிக வாழ்க்கையைப் பற்றி அறிந்திராத மக்கள் வாழும் பத்ரி என்ற குக்கிராமத்தில், கங்காபவத்யா — தேவகிரி அம்மா என்ற தம்பதியருக்கு 1835 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 28 இல் சீரடிசாயிபாபா என்னும் சிற்புத்திரன் அவதரித்தான்.


கங்காபவத்யாவிற்கு துறவு வைராக்கியம் முற்றிய நிலையில் தாம் பெற்ற குழந்தையைக் கூட திரும்பிப் பார்க்காது செல்ல அவரது பத்தினியாரும் ஆரண்ய வாசம் மேற்கொள்ள கானகம் சென்றனர்.

தனித்துவிடப்பட்ட குழந்தையை சூபி என்ற இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் தம்பதியினர் எடுத்து 4 வயது வரை வளர்த்தனர். இவரை வளர்த்த முகம்மதியர் அப்போது இறக்க அவரது மனைவியால் இப்பிள்ளை வளர்க்கப்பட்டது. இந்து முஸ்லிம் மோதல்கள் அதிகமாக நடந்த அக்காலத்தில் இக்குழந்தை இந்துக்கோயில்களுக்குச் சென்று ''நானே அல்லா'' என்றும் மசூதியில் ''இராமனும் கிருஷ்ணனும் தெய்வங்கள்'' எனப்பாடியும் ''சிவனே அல்லா'' என்று கர்ச்சித்துக் கொண்டும் திரிவான். இதனால் இருதரப்பினரதும் கோபத்துக்கு ஆளாகினான்.

அவனை ''வெங்கூசா'' என்ற இந்து மகானின் ஆச்சிரமத்தில் சேர்த்தார் வளர்ப்புத்தாய். 'வெங்கூசா' எல்லாவற்றிலும் இந்தச்சிறுவனுக்கே முதலிடம் கொடுத்தார். இதனால் அங்கு இருந்தவர்களின் கோபத்திற்கு ஆளாக ஒரு நாள் நள்ளிரவு அவ்விடத்தை விட்டகன்று சீரடியை வந்தடைந்தார். அங்கு இரு மாதங்களே தங்கிய பின் ஊர் ஊராக பக்கிரி வேடத்தில் சுற்றித்திரிந்தார். இறுதியில் துர்த்ரகடா எனும் சிற்றூரை அடைந்து அங்கிருந்து சாந்துபாய்ப்பட்டேல் குழுவினருடன் திருமணமொன்றிற்காக மீண்டும் சீரடியை வந்தடைந்தார். அன்றிலிருந்து சுமார் 60 வருடங்களாக சீரடியை தமது இருப்பிடமாக அமைத்தார்.

அக்காலத்தில் பம்பாய் மாநில அரசில் கலெக்டராக பணிபுரிந்த H. V. ஹரிவினாயக தானே என்பவர் தம் மனைவியை இழந்து தவித்து தமது நண்பர் டாக்டர் D. G. தானே மூலமாக பாபாவின் புகழை அறிந்து தரிசிக்கச் சென்றார். பலசமயங்களில் தானேயைப் பார்த்து சிரிப்பதும் கைகளை ஒரு மாதிரியாக அசைத்துக் கொண்டு இருந்தார் பாபா.

இதனால் பாபா ஒரு விசரனாக இருப்பாரே என்று தானே சந்தேகப்பட்டார். இவரது பெயரைக் கூட இவரது நண்பர் பாபாவிடம் கூறவில்லை. இதனைப்



புரிந்து கொண்ட பாபா ''சாத்தே நீ எதற்கு கவலைப்படுகிறாய் தேகத்தின் மீது இப்படிப்பட்ட பாசத்தை வைப்பது ஏன்? அது அழியக் கூடியதல்லவா? கவலைகள் எல்லோருக்கும் ஏற்படுவது சகஜமே. ஆனால் அவைகள் ஓடும் மேகங்கள் போன்றவை. தைரியமாக இருந்து உன் குழந்தையைக் காப்பாற்று'' என்று கூறினார்.

இவருடைய நண்பருக்கு கூட இவருடைய மனைவி ஒரு மகனை ஈன்றுவிட்டு மாண்டாரென்ற உண்மை தெரியாது. இதனால் பாபா ஒரு 'திரிகால ஞானி' நடந்ததையும் நடப்பதையும் இனி நடக்கப் போவதையும் நன்கறிவாரென உணர்ந்தார் தானே இதனால் பாபாவிடம் சரணடைந்து 'சாத்தே வாடா' என்ற தங்கு விடுதியை சாயிபக்தர்கள் சீரடியில் தங்குவதற்குத் தானே கட்டுவித்தார். முதலில் பாபா சாத்தேயை நோக்கி, 'சீரடிக்கு கோட்டைகட்டு' என பணிக்க அவர் இவ்வளவு பெரிய கட்டடத்தைக் கட்ட நான் ஒரு லட்சாதிபதி இல்லைச் சுவாமி என்றதும் உடனே பாபா ''யாமிருக்கப் பயமேன்'' (Why Fear When I am Here My Dear) என்றார். இதைக்கேட்ட சாத்தே மிகத் துணிச்சலாக செயற்பட்டு பாபாவின் அவதாரப் பணியில் முதன்மையான கருவியாக விளங்கினார்.

சீரடி பாபா ஏறக்குறைய ஐந்தரை அடி உயரத்துடனும் தங்கத்தைப் போன்று பளபளப்பான மேனியராகவும் நீல நிறக்கண்கள் உள்ளவராகவும் திகழ்ந்தார். அவை இருளில் கூட ஒளிரும். பாபா எப்பொழுதும் முரட்டு வெள்ளைத் துணியிலான உடைகளையே அணிந்தார். அவர் தலையைச் சுற்றி எதற்காக துணியைக் கட்டிக் கொண்டார் என்று அவர் கூறியதில்லை.

அவர் குளிக்கும் போது உடல் அவயவங்களை வெளியில் எடுத்து காயவிட்டு குளிப்பதைப் பார்த்த அவ்வூர் மக்கள் இவர் பக்கிரி யல்ல பெரிய மகான் என்பதை உணர்ந்தனர்.

**ம. சிவயோகசுந்தரம்**

அவா எங்கும நிறைந்தவராகவும் எல்லாம் அறிபவராகவும் திகழ்ந்தார்.

### அனைத்துக் கடவுளுமானார்

சீரடி பாபா யாரென சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரது பக்தர்கள் அவரை சிவனாகவும், கிருஷ்ணனாகவும், யேசுவாகவும், அல்லாவாகவும் எல்லாக் கடவுளுமாகவே கண்டனர். இறைவனது தூதராகவும் தெய்வீக வாழ்க்கையின் தூதராகவும் அவர் பலவீனமான மனிதர்களிடையே வாழ்ந்தார். ''நான் இறைவனின் அடிமை'' என்றார். 'அல்லாமலிக்' (இறைவனே எல்லாவற்றுக்கும் உரிமையாளன்) என்று அடிக்கடி கூறுவார்.

ஆனால் வெவ்வேறு சமயங்

( 9 ஆம் பக்கம் பார்க்க)



1985 இல் பர்த்திசென்ற சிவபக்தர்நாராயணகிரிக்கு சுவாமி தரிசன வரிசையில் [illegible] கொண்ட [illegible] தரிசனம் கொடுத்த காட்சி.

START THE DAY WITH
FILL THE DAY WITH
END THE DAY WITH

THIS IS THE WAY TO

**LOVE IS GOD**

— BABA

## யாமிருக்கப் பயமேன்?

''அன்புடனும் பக்தியுடனும் யாரொருவர் எனக்கு ஓர் இலை, ஒருமலர், ஒரு பழம் அல்லது தண்ணீரைச் சமர்ப்பிக்கின்றார்களோ அந்தத் தூய்மையான தன்னடக்கமுடைய அன்புக் காணிக்கையானது ஆர்வத்துடனும் தாமதமின்றியும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.'' இது கீதையில் ஸ்ரீ கிருஷ்ணருடைய வாக்கு.

ஸ்ரீ கிருஷ்ணருடைய பூர்ண அவதாரமான பகவான் சீரடி சாயிபாபா ஒருநாள் மத்தியான ஆர்த்தி முடிந்த பின் அடியார்களை நோக்கி பின்வருமாறு கூறுகிறார். ''நீங்கள் எங்கு வேண்டுமென்றாலும் இருங்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செய்வது அனைத்தும் எனக்குத் தெரியும். நானே அனைவருடைய அந்தரங்க ஆட்சியாளனாய் இருதயத்தில் அமர்ந்து இருக்கின்றேன். இந்த உலகின் கண் அசையும் அசைவற்ற சகல ஜீவராசிகளையும், நான் அரவணைக்கின்றேன். இந்தப் பிரபஞ்சமென்னும் தோற்றத்தை நானே கட்டுப்படுத்துபவன் ஆட்டுவிப்பவன். எல்லா வர்க்கங்களின் மூலமாதா நானே. முக்குணங்களின் கூட்டுறவும் நானே. எல்லா உணர்ச்சிகளையும் உந்துபவன், படைப்பவன், காப்பவன், அழிப்பவனுமாம் என்பால் கவனத்தைத் திருப்புபவனை எதுவும் துன்பம் விளைவிக்காது. ஆனால் மாயை என்னை மறந்தவனை ஆட்டி உலைக்கும் எல்லாப்பூச்சிகள், எறும்புகள் கண்ணுக்குத் தென்படுபவை. அசையக்கூடிய, அசைய முடியாத உலகம் எல்லாம் என்னுடைய உடம்பு அல்லது உருவம் ஆகும்.

உலகத்தின் சிருஷ்டி கர்த்தாவாகிய சீரடிப் பிரவுவையும், அவரின் மறு அவதாரமான பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவையும் காணும் பாக்கியம் பெற்ற நாங்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகளே. இறைவனே மனித உருத்தாங்கி எம்மனோரை வழி நடத்த வந்திருக்கிறான். அதர்மம் தலையெடுக்கும் போது நல்லோரைக் காத்து தீயோரை அழிக்க வந்திருக்கிறான் எம் கண்ணபிரான். யாமிருக்கப் பயமேன் சாயீசனின் அபயகஸ்தம் எம்மைக் காக்கும்.''

''சாயிதாசன்''

## சத்தியசாயி அவதாரம்

சத்தியசாயி அவதாரங்கள் சரீரங்களினால் வேறானாலும் தெய்வத்துவம் ஒன்றே. முதல் அவதாரமான சீரடி அவதாரம் தெய்வத்துவத்தை வெளிப்படுத்தவும் சத்தியசாயி அவதாரம் தெய்வத்துவத்தை பிறருக்கு அளிக்கவும், வரப்போகும் பிறேமசாயி அவதாரம் தெய்வத்துவத்தை செய்வதற்காகவும் — என்று பகவான் தன் அருளுரையில் கூறியுள்ளார்.

## அவதார உண்மைகள்

பகவான் பாபா இமயமலையில் 18,000 அடிக்கு மேலே உள்ள நர நாராயண குகையில் சில பக்தர்களைத் தேர்ந்தெடுத்து ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளார். இவர்களில் இருவர் 180 வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்களுக்குத் தேவையான உணவைக் கொடுப்பதற்கு பகவான் பாபா ஓர் அட்சய பாத்திரம் வழங்கியுள்ளார். இந்த ஆன்மீக பயிற்சியாளர்கள் சமைப்பதில்லை.

இப்பாத்திரத்தின் மகிமை பற்றி பகவான் பாபா கூறியதாவது:

மகாபாரதத்தில் கிருஷ்ணனால் திரௌபதிக்கு கொடுக்கப்பட்ட அட்சய பாத்திரத்தில் உணவில் சிறு பகுதியைப் போட்டால் தான் அது பெருகும். ஆனால் இந்த அட்சய பாத்திரமோ எப்போது இச் சாதகர்கள் பசியாக இருக்கின்றார்களென பகவான் நினைக்கிறாரோ அப்பொழுது அந்தப் பாத்திரத்தில் உணவு தோன்றும். இப்பாத்திரத்தில் தோன்றும் பிரசாதத்தை உண்ண இமய மலையிலிருந்து பல முனிவர்களும் ரிஷிகளும் வருவார்கள். இவர்களது வயது 500 இல் இருந்து 1,000 வரை இருக்குமாம்.

இங்கு வரும் பகிர் பாபா எனும் ரிஷி, நர நாராயண குகைத் தலைவருக்கு தெரிவித்த உண்மை. ''நான் சீரடி பாபாவை தரிசித்தேன். இப்போது சிவசக்தி அவதாரமான சத்திய சாயி பாபாவையும் இனி வரும் பிரேம சாயி பாபாவையும் தரிசிப்பேன். இவர்கள் எல்லாம் சிவ அவதாரங்கள்'' என்பதாகும்.

இப்படிச்சொன்ன ரிஷியின் வயது ஆயிரத்துக்கு மேலாக இருக்குமென மகேஸ்வரானந்த சுவாமி தெரிவித்துள்ளார். ★

## சாயி அவதார வாக்கியம்

சாது சந்நியாசி, ரிஷி முனிவர்கள், மகா புருஷர்கள் யாவரும் என்னிடத்து வரக் காத்திருக்கின்றனர். நானே அவர்களை நிறுத்தி வைத்திருக்கின்றேன். அவர்கள் என்னிடம் வந்து விடில் சாதாரண மக்கள் என்னை நெருங்க முடியாது போய் விடும். அதனால் நான் அளித்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி என்னை முழுதும் உணர்ந்து ஆன்மீகத்தில் முன்னேறுங்கள். இந்தப் புண்ணிய பலனைத் தவறவிட்டு விடாதீர்கள். கிடைத்த சந்தர்ப்பத்தை வீணாக்கி விட்டு பின்னால் வருத்தப்படாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். அரச திணைக்களங்களில் உள்ள

# கணக்காளர் பதவி வெற்றிடங்களை நிரப்புமாறு அரசிடம் கோர முடிவு

குருநகர், செப். 27

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் அரச திணைக்களங்களில் உள்ள 35 கணக்காளர் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை. இதனை நிரப்புமாறு அரசைக் கோரும் தீர்மானம் விரைவில் நடைபெறவுள்ள அரச கணக்காளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ளதாக யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் எஸ். சிவபாலன் தெரிவித்தார்.

பொது நிதி அபிவிருத்திக் கணக்கியல் நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வரும் நிதி முகாமைத்துவ பயிற்சி நெறித் தொடரின் 5 ஆவது பயிற்சி நெறியின் நிறைவு நாள் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இறுதி நாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னைய நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் இயங்கி வரும் நிதி முகாமைத்துவ யாழ். மாவட்ட பயிற்சி நிலையத்தில் இணைப்பாளர் நா. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம கணக்காளர் எஸ். சிவபாலன் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கு இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதனால் அரச நிதி பெருமளவில் விரயமாவது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் மீளவும் நியமிக்கப்பட்ட ஒரு கணக்காளர் நாளொன்றுக்கு ரூபா எழுநூறு சம்பளமாகப் பெறுகின்றார். அத்துடன் அவருக்கு மாதாந்த ஓய்வூதியமும் இதனுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இதனால் அரச நிதி பெருமளவு விரயமாகின்றது. திணைக்களங்களில் கடமையாற்றும் கணக்காளர்கள் அத் திணைக்கள நிதி வீண் விரயமாவதைத் தடை செய்ய வேண்டியது அவசியமாகும். இதனால் அவர்கள் பல எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் கணக்கியல் வேலைகளைச் செய்து வரும் கணக்கு எழுதுநர்கள், கணக்குப் பதிவாளர்கள் தமது வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் நிதி அமைச்சு — ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து இப் பயிற்சி நெறியை வழங்கி வருகின்றது. அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தின் அடிப்படையிலேயே இப்பயிற்சி நெறி நடைபெறுகிறது.

வெளிநாட்டு நிதியில் இருந்து இப்பயிற்சி நெறி நடைபெறுவதனால் இதில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்கள் மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். கொழும்பில் உள்ள அரச திணைக்களங்களில் கணனியின் பாவனை தற்போது அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் தற்போது அரச திணைக்களங்களில் கணனிகளைப் பாவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக இங்குள்ள எழுதுநர்களுக்கு கொழும்பில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. யாழ்ப்பாண நிலையத்திலும் விரைவில் கணனிப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது — என்றார்.

(ஐ-51)

மாவீரர் வாரத்தில்

# பெரும் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்?

நவம்பர் மாதத்தில் நினைவு கூரப்படவுள்ள விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தின்போது தென்மராட்சிப் பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள தாங்கள் தயாராகி வருவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று "யுக்திய" சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதத்தில் மாவீரர் வாரத்தின்போது விடுதலைப் புலிகள் பெரும் எடுப்பில் தாக்குதல்களை மேற்கொள்வது வழக்கம் எனவும்—

ஆனால் கடந்த வருடம் அவ்வாறான தாக்குதல் இடம் பெறவில்லை எனவும்—

அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை பூநகரிப் பகுதியில் இருந்து தென்மராட்சி மீது பெரும் எடுப்பில் தாக்குதலை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மேற்கொண்டு வருவதாகவும் —

இதுகுறித்து கருத்து வெளியிட்ட தமிழ்க் கட்சிகளின் வட்டாரங்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி மீது அவ்வாறான தாக்குதல் ஒன்று இடம்பெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெரிவித்ததாகவும் —

அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு அவ்வாறான ஒரு தேவையின் அவசியம் அதிகரித்துவருவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

(உ-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும்
பாடசாலை அபிவிருத்திச் சங்க
நிர்வாக உறுப்பினருமான
திரு. சி. வைகுந்தசாமி
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி சரஸ்வதி வைகுந்தசாமி**யின்

திடீர் மறைவால் துயருறும் அன்னாரின் அன்புக் கணவன் திரு. சி. வைகுந்தசாமி அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு துணைவியாரின் ஆன்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்
யா/ நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலை
(59423)



## 31-ம் நாள் நினைவஞ்சலி

எமது சக மாணவி
தி. சுகந்தினி
அவர்களின் தந்தையார்
**பொ. தியாகராஜா**
அவர்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சகமாணவர்கள்,
உயர் தொழில் நுட்ப நிறுவகம்,
N. D. B. S II ஆம் வருடம்
(59433)


## வைர விழா

யாழ்ப்பாணம், செப். 27

அளவையம்பதியைச் சேர்ந்த சங்கீதபூஷணம் வி. கே. நடராசாவை கௌரவித்து எடுக்கும் வைரவிழா எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

## தாதியருக்கு பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 27

தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஆதரவுடன் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினால் 94ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி முதல் 95 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி வரை தாதிகள் பயிற்சியைப் பெற்ற பயிலுநர்களுக்கு பரீட்சை நடத்தப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்கள் உடனடியாக "எஸ். செல்வரஞ்சன், மாவட்ட ஆணையாளர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், புகையிரத நிலைய வீதி, கொக்குவில்" என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பயிலுநர்களின் பெயர் விவரம் வருமாறு:

எஸ். சிவச்செல்வி, பி. ஜெகதீஸ்வரி, எஸ். செல்வமதி, கே. கலைமதி, எஸ். டெய்சிராணி, பி. வவி சுஜாதா, பி. சொர்ணாம்பிகை, ஆர். ஏ. பிறேமதர்சினி, வி. ஐமுனா, கே. என். குமுதினி, எழுதுவினைஞர் [illegible]

[illegible]

# உதைபந்தாட்ட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 27

'ஈஸ்டவெஸ்ற்' மார்க்கட்டிங் பிறைவேட் லிமிட்டெட் ஆதரவில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'டேர்க்கி' வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இரு ஆட்டங்கள் இடம்பெறவிருக்கின்றன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30க்கு ஆரம்பிக்கும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வி. க. அணியை எதிர்த்து யூனியன் வி. க. அணி மோதும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய மைதானத்தில் நடைபெறும் மற்றும் ஒரு ஆட்டத்தில் யங்ஸ்ரார் வி. க. அணியை எதிர்த்து சென்ரலைட்ஸ் (புளுஸ்) அணி மோதும்.

இவ்விரு ஆட்டங்களிலும் பங்குபற்றும் வீரர்கள் மற்றும் ரசிகர்கள் செல்ல வசதியாக இலவச போக்குவரத்துச் சேவை இன்று காலை 8 30 மணிக்கு யாழ். கொமார்ஷல் வங்கி முன்பாக இருந்து ஆரம்பமாகும். (ஐ-3)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் தனது கழக மைதானத்தில் நடத்தி வரும்— ஏழுபேர் கொண்ட— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

4 மணி —கலட்டி 'பி' அணி எதிர் சிவானந்தா 'ஏ' அணி.

பருத்தித்துறை ஐ. வி. க. 'ஏ' அணி எதிர் கலைவாணி அணி.

(ஐ-3)

# நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், செப். 27

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் க. குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வருடைய ஆசியுரையைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் சே. சிவகுமாரனின் சிறப்புச் சொற்பொழிவும், நாடகம், நடனம், பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ஐ-8-30)

★ ★ ★

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இந்து மாமன்றம் நடத்தும் வாணி விழா எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு செல்வி பூரணி நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருமதி புவனேஸ்வரி பஞ்சநதம் கலந்து கொள்வார். (ஐ-8)

★ ★ ★

யாழ். கல்வித்திணைக்கள நலன்புரிக்கழகம் நடத்தும் நவராத்திரி பூசையும், கலைமகள் விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்வித்திணைக்கள வலயம் 1 இன் பணிமனையில் ச. வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும், விசேட பாட அலுவலர் எல். திலகநாயகம் போலின் இசை நிகழ்ச்சியும், கீதவாகினி இசைக்கல்லூரியின் வாத்திய இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளன. (ஐ-8)

★ ★ ★

கைதடி கல்விக்கழகத்தின் வாணி விழாவும், கலை நிகழ்ச்சிகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்விக்கழக இயக்குநர் தலைமையில் நடைபெறவுள்ளன.

★ ★ ★

கோப்பாய் மதுகலவி நிறுவனம் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிமுதல் 11 மணிவரை ஆரம்பபிரிவு நிகழ்வுகளும், பிற்பகல் ஒரு மணிமுதல் 3 மணி வரையும் இடைநிலைப்பிரிவு நிகழ்வுகளும், பிற்பகல் 3 மணிமுதல் 4 மணிவரை ஜி. சீ ஈ சாதாரணப் பரீட்சையில் உயர்சித்திபெற்ற கல்வி நிலைய மாணவருக்கான பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன. சிறப்பு நிகழ்வாக மாலை 4 மணி முதல் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையின் ஆட்டக்கூத்து நடைபெறும்.

(ஐ - 8)

## கம்பன் கழக இசையரங்கு

குடாநாட்டில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் நிகழ்வாக நவராத்திரி இசையரங்கு இன்று பிற்பகல் 5. 15 மணிக்கு ஆசிரியர் க. சிவராமலிங்கம் தலைமையில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசியுடன் ஆரம்பமாகும் இந்த இசை அரங்கிற்கு துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் எஸ். பத்மலிங்கத்தின் இசையரங்கு இடம்பெறும். (ஐ-ரீ)

## மின்னியல் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான மன்றம் நடத்தும் 'ஒட்ட மின்னியல் பயிற்சிப் பட்டறை, எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் 3 ஆம் திகதிகளில் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குமுன்னதாக ஜி. சீ ஈ. சாதாரண தரமாணவர் 4பேரினதும், ஜி சீ ஈ. உயர்தரம் 2000 பிரிவில் நால்வரினதும் விஞ்ஞான ஆசிரியர்கள் இருவரினதும் பெயர் விபரங்களுடன் விண்ணப்பிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## எழுதுநராக நால்வர் தெரிவு

நவாலி, செப். 27

கடந்த மாதம் 22ஆம், 23 ஆம் திகதிகளில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற எழுதுவினைஞர் சேவைக்கான நேர்முகப்பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்கள் 1 – 10 – 98 முதல் வழங்கப்பட்டுள்ளன. நியமனக்கடிதங்களை எதிர்வரும் நாளை மறுதினம் கொழும்பில் உள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக மன்றத்தில் வந்துபெற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

- ★ வனஜா (சண்டிலிப்பாய்)
- ★ வாசுகி (சரவெட்டி)
- ★ தஸாரஞ்சினி நீர்வேலி)
- ★ கமலாசினி (யாழ்ப்பாணம்)

(ஐ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இசை வகுப்புகள்

கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகள் 30-09-98 அன்று பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு: வாசுகிரங்கன், 16/2, கச்சேரி நல்லூர், வீதி, யாழ். நகர்.
(59441)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- இல. 1, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்).
(59425)

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(59445)

## விற்பனைக்கு

குறோட்டன், பாம், சைப்பிரஸ், பான்சைப்பிரஸ், ஒறக்கேரியா, எக்ஸ்சோறா, பிறைட்ஒவ் ஜப்பான் ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. பாக்கியநாதன், 152/2. கோயில் வீதி. யாழ்ப்பாணம்.
(59426)

வான் கோழி, மணித்தாரா, இனிக்கோழி, பன்ரம் கோழி, முயல், மூன்று மாதம் பூர்த்தியான பொமனேரியன் நாய்க்குட்டி, டாஷோன் பெண்நாய், சணல் ஆடும், குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; லிங்கமூர்த்தி மயூரன், அரசடி மகாவித்தியாலயம் அருகில், நவாலி.
(59429)

## ஆங்கிலம் விசேடமாக

O/L 98 இல் Credit, Distinction பெறுபேறடைய G.A.Q வெளிவாரி (Spoken English) B Sc. London Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி. சிவன் கோயில் மேற்கு வீதி. திருநெல்வேலி.
(59354)

## வீடு விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வின் புங்கன்குளறோட் ஒழுங்கையில் (அன்னம்மாள் கோயிலுக்கு அண்மையில்) அமைந்துள்ள 2½ பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 261/11 கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(59440)

சகல வசதிகளையும் கொண்ட 5 அறைகள் உடைய பெரிய வீடு (4 பரப்பு), (நீதிவான் வீடு) உடன் விற்பனைக்குண்டு. வீட்டுஇல. 18, (பழைய நம்பர்) 24 (புதிய நம்பர்) விதானையார் வீதி, சுண்டுக்குளி, தொடர்பு; 31, விதானையார் வீதி, சுண்டுக்குளி.
(59446)

## தேவை

யாழ். நகரில் உள்ள ஆங்கில மருந்தகம் ஒன்றுக்கு, ஆங்கில மருந்து வகைகளில் ஆற்றலும், அனுபவமும் உள்ள விற்பனையாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல. 792,
மே/பா உதயன்.
361, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
(59407)

## திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வெளிநாட்டு உத்தியோகத்தர்கள் போன்ற இருபாலாரது குறிப்புகளும் உண்டு. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(59443)

## தவறிவிட்டது

23-09-98 அன்று சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருஞானசம்பந்தர் வித்தியாலய காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
(59430)

## உடன் விற்பனைக்கு

ஓடுபோட்ட பழைய கட்டடம் தனித்து அல்லது 8 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. பொ. ச. ஞானசீலன் 35, புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி.
(சி-4994)

## உதவியாளர் தேவை

றபர்சீல் தயாரிக்க ஆண் உதவியாளர் தேவை. பிறந்த திகதியிடன் விண்ணப்பிக்கவும். 91/1, மின்சார நிலைய வீதி (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
(59351)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், தூய, பிரயோக கணிதம், இணைந்த கணிதம் மிகச் சிறப்பாகக் குறுகிய காலத்தில் முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் விஷேடமாகக் கற்பிக்கப்படும். அனுபவம் பெற்ற ஆசிரியர். தினசரி 2.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். R. பாலசுப்பிரமணியம், B sc (cey), Dip-in-Ed, 17/1, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
(59448)

## கண்டீர்களா?

முத்துக்குமாரசாமி கோகிலகுமாரி என்பவரது தேசிய அடையாள அட்டை (766702244 V), விசேட அடையாள அட்டை (091047378), பல்கலைக்கழக அ. அட்டை (96/A/73) யும் கடந்த 25-9-98 அன்று கே. கே. எஸ். வீதி - இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் M. கோகிலா, இளையதம்பி ஹோம், உடுவில் அல்லது யாழ். பல்கலைக் கழகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(59439)

## இசைநூல்

விரிவுரையாளர்
பிரம்மஸ்ரீ அ. நா. சோமஸ்கந்த சர்மா
அவர்கள் எழுதிய
'மிருதங்க சங்கீத சாஸ்திரம்' நூல்

விரிவாக்கப்பட்ட புதிய பதிப்பு வெளி வந்துள்ளது. இசைப் பரீட்சார்த்திகளுக்கு உதவும் இந்நூற் பிரதிகளை ஸ்ரீலங்கா புத்தகசாலையின் எல்லாக் கிளைகளிலும், 160, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13., இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார் மடம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியின் விலை ரூ 200. 00
(59435)



## அகில இலங்கைக் கம்பன் கழகம்

## நவராத்திரி இசையரங்கு

தலைவர்;
திரு. க. சிவராமலிங்கம்

அருளாசி:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

பிரதம அதிதி:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

காலம்: 27 – 09 – 98 இன்று ஞாயிறு
மாலை 5-15 மணி (புதிய நேரம்)
இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்.

இசையரங்கு

திரு. எஸ். பத்மலிங்கம் — பாட்டு
திரு. கே. குகபரன் — வயலின்
திரு. எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்'

த. சிவசங்கர்
தலைவர்

த. ஜெயசீலன்
பொருளாளர்

(சி/4984)

## மானிப்பாய் கோ. ப. ப. நோ. கூ. சங்கம்

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் 12,000 வெற்றுச் சாக்குகளும் 20,000 வெற்றுப்பைகளும் விற்பனைக்கு உண்டு. மீளளிப்பு வைப்பாக ரூபா. 500- செலுத்தி சங்கத்தினால் வழங்கப்படும் பத்திரத்தில் தங்கள் கூறுவிலைகளைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு 5. 10. 98 க்கு முன்னர் சங்கத்தில் ஒப்படைக்கவும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய். ப. நோ. கூ. சங்கம்.
மானிப்பாய்.
(சி/4991)

## சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அண்மையில்)

புலமைப் பரிசில்பரீட்சை - 2 இல்
முதல் 5 இடங்களைப் பெற்றோர்

B. கஜானன் — (பரி. யோவான் கல்லூரி)
K. அச்சுதன் — (பரி. யோவான் கல்லூரி)
K. கோபிகிருஷ்ணா — (மத்தியகல்லூரி)
J. சோபின்யா — (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
J. நிரோஜினி — (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

4 ஆவது பரீட்சை 28 - 09 - 98 [திங்கள்]
பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறும்.
சி/4992)

## தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயத்தின்

## இலவச வைத்திய சேவை

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை
திங்கள், வியாழன் ஆகிய நாள்களில்

இணுவில் மக்லியோட் வைத்தியசாலை
செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில்

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் நலனை முதன்மைப்படுத்தி இலவச சிகிச்சைகள் 28-09-98 முதல் ஆரம்பமாகின்றன.

நேரம் மாலை 2-00 மணி முதல் 4-00 மணி வரை

லயன் எஸ். ஜே. செல்வராஜா
நிர்வாகச் செயலர்
(59348)

## நினைவுகளில் ஓராண்டு

தோற்றம்
09 — 02 — 1909



மறைவு
08 — 09 — 1997

அமரர்
### செல்லப்பா தியாகராஜா
(சங்கானை)

இறைவனடி சென்ற எம் அன்புத்
தெய்வமே! காலங்கள் கடந்தாலும்
உங்கள் பாசமும் நேசமும்
எங்கள் நெஞ்சை விட்டகலாதையா!
ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
தி. குணசிங்கம் (மகன்),
சேக்கிவ் சென்ரர், சங்கானை.
(59438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூடி மறைக்கும் முயற்சியா?

தாமதமாகும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமன் என்று சுட்டிக் காட்டும் சுலோகமே மனித நேய அமைப்புகள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்திய மறியல் போராட்டத்தின் முக்கிய குரலாக அமைந்தது.

குடாநாட்டில் காணாமற் போனோர் விடயத்திலும் செம்மணிப் புதைகுழிகளைத்தோண்டும்விடயத்திலும் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கைக் கண்டித்தே குறிப்பிட்ட மறியல் போராட்டம் நடத்தப் பெற்றது.

யாழ்ப்பாணத்து இளைஞர்களும், யுவதிகளும் நூற்றுக் கணக்கில் காணாமற் போய் மூன்று வருடங்களும் கழிந்து விட்டன. ஆனால் அவர்களுக்கு என்ன நேர்ந்தது, எங்கு இருக்கிறார்கள் என்பது குறித்து அரசாங்கம் ஓர் எழுத்தைத் தானும் எழுதவில்லை; சொல்லவுமில்லை.

நூற்றுக்கணக்கான பெற்றோர்களும், மனைவியரும், உறவினர்களும் தமது இரத்தத்தின் இரத்தங்கள் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே–

குடாநாட்டு இளைஞர், யுவதிகள் கொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டார்கள் என்ற பயங்கரமூட்டும் தகவல் வெளியானது. அதனைக் கேட்டு தமது உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கும் மனித மனங்கள் என்ன பாடுபடும் என்பதனை அரசதரப்பு சிறிதளவேனும் சிந்தித்ததாக இல்லை.

ஒரு தாய் தலைவியாக உள்ள அரசாங்கத்திடம், ஒரு துளி மனித நேயம் தானும் இல்லாமற் போனமை மிகவும் துர்திர்ஷ்டமாகும். அரச தரப்பில் உள்ள தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தத்தமது பிள்ளைகள் காணாமற் போயிருந்தால் தான் குடாநாட்டுத் தாய் தந்தையரின் துயரம் உள்ளத்தில் பட்டிருக்குமோ?

தென்னிலங்கையில் இப்படி ஓர் அநியாயம் நடந்திருந்தால், அரசாங்கத் தலைவர்கள் நான் முந்தி நீ முந்தி என்று விழுந்தடித்துக்கொண்டு மக்கள் நலன் காப்பவர்கள் போன்று செயற்பட்டிருக்க மாட்டார்களா?

தமிழர்கள் சம்பந்தப்பட்ட எந்த விடயமானாலும் மனிதாபிமானம், மனித நேயம் தானும் ஆகாது என்ற தோரணையிலேயே அரசின் அலுவல்கள் நடைபெறுகின்றன. தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பறிப்பதற்கும் அவர்களை அடக்கு முறைக்கு ஆட்படுத்துவதற்கும் உள்ள திட்டமிடுதலும், வேகமும் அவர்களுக்கு மனித நேயம் காட்டுவதில் எள்ளளவும் இல்லை!

மூன்று வருடத் தாமதத்தால் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை குடாநாட்டுப் பெற்றோர்கள் இழந்து வருகிறார்கள். இப்போதாவது அரசு செயலில் இறங்காவிடில் அவர்களுக்கு நீதி வழங்காமல், கொடுமையான குற்றத்தை மூடி மறைக்கும் முடிவாகவே இந்த விவகாரங்கள் முற்றுப் பெறும்.

## பெரிய வெடிச்சத்தம், வேட்டொலி கேட்டது

# தரையில் படுக்க முயன்றேன் அதற்குள் ஏதோ ஒன்று தொடையைதுளைத்தது!

### குருநகரில் காயமடைந்தவர் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், செப். 27

திடீரென்று கேட்ட பெரிய வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. என்னுடன் நின்றவர்கள் நிலத்தில் விழுந்து படுத்தனர். என்னால் உடன் நிலத்தில் விழுந்துபடுக்கமுடியவில்லை; அப்போது என்னுடைய தொடையை ஏதோ ஒன்று துளைத்துச்சென்றது.

நேற்று முன்தினம் மாலை குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது தொடையிலும் கையிலும் காயமடைந்த குருநகர் வாசியான கஸ்பார் கிறிஸ்தோப் பிள்ளை (வயது 67) இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி சம்பவம்பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஒவ்வொரு நாளும் எனது வயோதிப நண்பர்களுடன் கதைத்துப் பொழுது போக்குவதற்காக குருநகர் சவக்காலைச் சந்திக்கு அண்மையில் உள்ள மரத்தடிக்குச் செல்வது வழக்கம். அன்று மாலை 5மணியளவில் அப்பகுதிக்குச் சென்ற நான் எனது நண்பர்களுடன் கதைத்துக்கொண்டு நின்றேன். மாலை 6.15 மணியிருக்கும். சவக்காலைச் சந்திக்கு அண்மையில் பெரிய சத்தத்துடன் வெடிச்சத்தம் ஒன்றுகேட்டது. தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. சுமார் 10 நிமிடநேரம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைத் தொடர்ந்து என்னுடன் நின்று கதைத்தவர்கள் நிலத்தில் விழுந்து படுத்துக் கொண்டனர். பீதியடைந்த நான் நிலத்தில் படுத்துக் கொள்ளாது வீடு செல்ல முயற்சித்தேன். அப்போது எனது இடது காலையும், இடதுகையையும் ஏதோ ஒன்று திடீரென்று துளைத்துச் சென்றது. தொடர்ந்து காலில் இருந்தும் கையில் இருந்தும் இரத்தம் வருவதைக் கண்டநான் வீட்டிற்கு ஓடிச்சென்றேன். பின்னர் எனது மகனின் உதவியுடன் சைக்கிளில் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்டேன்—என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## கிடைக்காத கிருமிநாசனி மானிப்பாயில் விற்பனை

வலி தென்மேற்கு, செப். 27

கோழிச்சூடன், நெற்சப்பி, நாய்க்கடுகு போன்ற களை கொல்லிகளை அழிக்கும் மருந்துகள் மானிப்பாய் கோயில் பற்று பலநோக்குக் கூ. சங்கத்திற்கு கிடைத்துள்ளதாக சங்கத் தலைவர் மா. செல்வராசா தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் தட்டுப்பாடான 34. டி. பி. ஏ, எம். சி. பீ ஏ - 60 போன்ற மருந்து வகைகளே தருவிக்கப்பட்டுவழங்கப்படுகின்றன.

வலிகாமம் தென்மேற்கு பகுதி விவசாயிகளின் தேவையை இதன் மூலம் ஓரளவு நிறைவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மருந்துகள்யாவும் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை,—

உடுவில் கமநலசேந்திர நிலையமும் விரைவில் கிருமி நாசனி வகைகளைத் தருவிக்க உள்ளது. (ஐ-185)

## அடுத்த வாரம் முதல் இயக்கச்சிக்கு பஸ் சேவை

தென்மராட்சி, செப். 27

இயக்கச்சிப் பகுதிக்கு மக்கள் மீளக்குடியேறி வருவதையடுத்து இப் பகுதிக்கு பஸ் சேவை ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.—

யாழ். பஸ் நிலையத்திலிருந்து பி. ப. 4.30 மணிக்கு பளைக்கு புறப்படும் பஸ் இயக்கச்சி சுறுவில் வரை சென்று மறுநாள் காலை 7.00 மணிக்கு அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் இப்பகுதியில் மீளக்குடியேறும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாமென நம்பப்படுகிறது. (ஐ-117)

## மதகு திருத்த வேலை பூர்த்தி

உரும்பிராய், செப். 27

உரும்பிராய் — கோப்பாய் பிரதான வீதியில் மினக்கடான் வேம்படியிலுள்ளமதகு புனரமைப்பு வேலை முடிவடைந்ததைத் தொடர்ந்து இது போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இதுவரை அருகிலுள்ள ஒழுங்கையூடாக வாகனங்கள் பயணத்தை மேற்கொண்டன. (ஐ-154)

## கூட்டுறவுச் சங்கங்களில் நவராத்திரிப் பொருள்கள்

தென்மராட்சி, செப். 27

நவராத்திரிஉற்சவத்திற்குத் தேவையான பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்துள்ளதையடுத்து ஆலயங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் ஆகியவை தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றன.

தேங்காய் எண்ணெய், கடலை வகைகள், அவல், சர்க்கரை, கற்கண்டு, உழுந்து, பயறு, அரிசி, போன்ற பொருள்கள் சந்தை விலையைவிட குறைந்தவிலைக்கே சங்கக் கிளைக் கடைகளில் விற்கப்படுவதால் பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு இப் பொருள்களைக் கொள்வனவு செய்வதையும் காண முடிகிறது. (ஐ-117)

### நாளை

புரட்டாதி 12
திங்கட்கிழமை
திதி: ஸப்தமி
முற்பகல்: 10.14 வரை:
நட்சத்திரம்: மூலம்
பின்னிரவு 02.47 வரை:
சுபநேரம்: 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

பற்றை ஒழிப்பதும், பாவங்களிலிருந்தும் நீங்கப்பெறுவதும் ஞானத்தின் லக்ஷணமாகும்.
- ஸ்ரீராமானுஜர்

## கண் சோதனை முகாம்

மானிப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் விழி வெண்படலத்தினால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் கண்டு சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கான கண் பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

55 வயதுக்கு மேற்பட்ட வசதி குறைந்தவர்களுக்கான மேற்படி கண் பரிசோதனைகளைக் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் மேற்கொள்வார்.

சாவற்காடு, சங்குவேலி, சண்டிலிப்பாய் பகுதி மக்கள் இப் பரிசோதனைகளுக்கு உட்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று செயற்திட்டத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராஜா தெரிவித்துள்ளார். (ஐ-8)

## பச்சிலைப்பள்ளியில் பெற்றோல் விநியோகம்

தென்மராட்சி, செப். 27

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம்பெற்றோல்ஒயில் ஆகியன வாகனங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

பெற்றோல் சேமிப்பதற்கான 9 ஆயிரம் லீற்றர் கொள்வனவு கொண்ட கொள்கலன் புதிதாக எரிபொருள் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பளைப் பிரதேசம், கொடிகாமம், செம்பியன்பற்று ஆகிய இடங்களைச் சேர்ந்த வாகனங்களுக்கு பெற்றோல், ஒயில் வழங்கப்படு என சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

எரிபொருள் நிலையத்தில் தற்போது மண்எண்ணெய், டீசல் ஆகியவை தாராளமாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-117)

## கண் சிகிச்சை முகாம்

நெல்லியடி, செப். 27

வடமராட்சி லயன்ஸ் கழக ஆதரவில் இலவச கண் சிகிச்சை முகாம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு மந்திகையிலுள்ள லயன்ஸ் கழக பணிமனையில் நடைபெறவிருக்கின்றது இக் கண் சிகிச்சை முகாமில் எஸ். எம். பெர்னாண்டோ குழுவினர் கண் பரிசோதனையை மேற்கொள்ளுவார்கள். (ஐ-109)

## 'வி-1' உரம் விநியோகம்

பயிரின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு நெற்பயிருடன் கலந்து விதைக்கும் 'வி-1' கலவை உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

ஓர் அந்தர் 'வி-1' கலவை 900 ரூபாவுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை—

எவ்வித கட்டுப்பாடும் இன்றி யூரியா உரத்தை இங்கு பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## வெட்டப்பட்ட நிவாரணம் மீண்டும் பளை மக்களுக்கு

தென்மராட்சி, செப். 27

50 வீத நிவாரண வெட்டினால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் அடுத்த வாரம் முதல் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

63ஏ, 63பி ஆகியபுள்ளிகளுக்கான நிவாரணப் பொருள்கள் பெற்ற இடம் பெயர்ந்தோர், மீளக்குடியமர்ந்தோர் ஆகியோருக்கான 66 ஏ, 66 பி ஆகிய புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தா. சுவாமிநாதன் தெரிவித்தார்.

உலர் உணவுப் பொருள்கள் பளை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வந்ததும் கிளைக் கடைகள் மூலம் அவை வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவித்தார். (ஐ - 117)

## சீரடிபாபா பிறந்ததின விழா

யாழ்ப்பாணம், செப். 27

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்ய சாயிசேவா நிலையத்தில் இன்று ஞாயிறு காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை சீரடிபாபா பிறந்த நாள் விழா நடைபெறவுள்ளது.

காயத்திரி மந்திர ஜெபம், ஹோமம், பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன நடைபெறும். (ஐ)

## நீரிறைக்கும் இயந்திரம்

தென்மராட்சி, செப். 27

கப்பலில் கொண்டு வரப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்கள், நீர் விநியோக குழாய்கள் ஆகியவை பச்சிலைப்பள்ளிப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வந்துள்ளனதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். (ஐ-117)

## வீதி திருத்தம்

உரும்பிராய் கிழக்கிலுள்ள ஞானவைரவர் கோயில வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. சுமார் 15 வருடங்களுக்குப் பின்பு இது திருத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சினால் இது மேற்கொள்ளபபட்டது (ஐ-154)

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் சங்கானைப் பகுதியில் நடத்தப்பட்டுவந்த தையல் நிறுவனம் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் பண்டத்தரிப்புப் பகுதிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. (ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு மேலானவற்றை நாடி உள்ளதையும் இழந்து விடாதீர்கள்

வீணே கவலை கொள்வது தவறு என்பதை இயேசு எப்போதும் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார். மத்தேயு 6: 25 - 34 இல் வீண்கவலையைப் பற்றி ஆண்டவர் உபதேசம் செய்வதனைக்கண்டு கொள்ளலாம். கவலை பற்றிக் கூறும்போது இரு உதாரணங்களை கிறிஸ்து தருகின்றார். அதிலொன்று வானத்துப்பறவைகள் அவை அடுத்த நாளைப்பற்றிக் கவலை கொள்வதில்லை. ஆனால் அன்றன்று தன் ஆகாரத்தைப் பெற்றுக்கொள்கின்றன.

ஒரு பறவையைப் பிடித்துக் கூண்டுக்குள் அடைத்துத் தினந்தோறும் உணவைப் போட்டு வருவோமானால் அது சந்தோஷப்படுமா? தான் பறக்காமல், அலையாமல் அந்த ஆகாரம் கிடைக்கின்றது என அது கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்க விரும்புமா? இல்லை! கூண்டை விட்டு வெளியில் வந்து சுதந்திர வானின் சிறகடித்துப் பறக்கத்தான் அது விரும்பும். சும்மா இருக்க, தானாய்க் கிடைக்கும் உணவைவிட, சுதந்திரமாகத் திரிந்து கிடைக்கும் உணவே அதற்குத் திருப்தி தரும்.

அது போல, மனிதனும் சுதந்திரவாளியாகப் படைக்கப்பட்டான். ஆனாலும் பேராசை போன்ற பாவச் சிறைக்குள் தன்னை அடைத்துக் கொண்டு, வெளியில் வர இயலாமல் சிக்கித் தவிக்கின்றான். தனது சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்றான். அச்சிறையிலிருந்து அவன் விடுபட்டாலேயே அவன் தன் வாழ்வில் மகிழ்ச்சியைக் காண முடியும்.

இயேசு தரும் இரண்டாவது உதாரணம் காட்டு மலர்ச் செடிகள். அவை எளிமையானவை. ஆனால் அழகானவை. சாலமொன் மன்னன் தன்னைச் செயற்கையாக அழகுபடுத்திக் கொண்டான். மேலே அண்ணார்ந்து

## ஞாயிறு நற்பிரசாதம்

பார்த்து எட்டாப்பழத்துக்குக் கொட்டாவி விடுவதைப் பார்க்கிலும், கீழே குனிந்து பார்த்து எளிமையிலும் அழகானதாக இருக்கும் காட்டுப் பூவை அவதானிக்க வேண்டும்.

மேலானவற்றை நாடி, உள்ளதையும் இழந்து விடாமல் இருக்க வேண்டும். நாம் எளிமையும், பண்புங் கொண்ட அழகு எனும் சொத்தை எமதாக்கிக் கொள்ள வேண்டும்.

"காட்டு மலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை நூற்பதுமில்லை. ஆனால் சாலமொன் கூடத் தம் மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்."

— (மத்தேயு 6:28, 29)

எனவே எங்கள் கவலைகளெல்லாம் அடி முடி எதுவாயின், அதுவே போதுமென்ற மனம் எமக்கு இல்லாததே ஆகும். மனிதன் அழிந்து போவதற்கு அவனது பேராசையே பெரும் காரணமாகிறது. ஏழை, பணக்காரனாக ஆசைப்படுகின்றான். பணக்காரன் லட்சாதிபதியாக ஆசையுறுகிறான். லட்சாதிபதி கோடீஸ்வரனாக ஆசைப்படுகின்றான். இந்த உலக வாழ்க்கை நிரந்தரமற்றது என்பதை மனிதன் மறந்து, பேராசை எனும் பெருந்தரித்திரத்திற்குப் பல வேளைகளிலும் ஆளாகின்றான். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதை உணர்ந்தவர்களாக, வீண்கவலைகளை விடுத்து நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவிடுவோம்.

சிந்திப்போம்! செயற்படுவோம்! ★

சகோ. பி. தேவதாஸ்

---

# சங்கானையூர் 'நிம்மதி' ஐயா

சங்கானைக் கிராமத்தில் நிம்மதி என்ற மனையில் வாழ்ந்து தன்மதிநுட்பத்தினால் அவ்வூர் மக்களின் பிரச்சினைகள் கஷ்டங்களைத் தீர்த்து வைத்து அனைவராலும் "நிம்மதியர்" என அழைக்கப்பட்ட கனகரத்தினம் ஓவசியர் அண்மையில் மறைந்தது அவ்வூர் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

சங்கானை ஒளி இழந்தது அவ்வூர் மக்களின் நன்மைக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைத்த பெரியார் அவர். சங்கானைப் பாடசாலைகள், மனோன்மணி ஆலயம், வெள்ளில் முருகன் கோயில் ஏனைய சமூக, சமய மன்றங்களின் வளர்ச்சிக்குப் பலவழிகளிலும் உதவிய பெரியார் நிம்மதி.

இந்திய இராணுவச் சுற்றிவளைப்பின் போது மக்கள் உணவுக்கு அலைவதைக் கண்டு தனது கஷ்டத்தைப் பாராது கள்ளவழிகளால் யாழ்ப்பாணம் சென்று அரச அதிபரைக் கண்டு லொறிகள் மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து விநியோகத்தவர் அவர்.

ஏழைகள் அநாதைகள்

## நீத்தார் நயப்புரை

கை விடப்பட்டோரின் பிரேதங்களைத் தானே முன்னின்று இறுதிக் கடமைகளை நிறைவேற்றியதோடு பிரேத வண்டில் ஒன்றையும் செய்து உதவியவர்.

வெளிமாவட்டங்களில் தாம் பணிபுரிந்த இடங்களில் உள்ளகோயில்களை யாழ்ப்பாணக் குருமார்களை அழைத்துச் சென்று கும்பாபிஷேகங்கள் செய்வித்த பெருமையும் இவருக்கு உண்டு. சங்கானைப்பகுதி அரச உயரதிகாரிகள் அபிவிருத்தி வேலைகளை அவரது ஆலோசனைப்படியே செய்வார்கள்.

நிம்மதி கனகரத்தினம் அவர்கள் நல்லவர், வல்லவர் ஆன்மபலம் உடையவர். ஆயிரம் பிறைகண்டு வாழ்ந்தவர். அன்னாரின் ஆன்மா இறை நிழலின்புற்றிடுக.

சங்கரத்தையூர்
சி. சபாநாதன் ★

---

# உங்களுடைய குழந்தை....

(மூன்றாம் பக்கத் தொடர்)

குழந்தைக்கு நோய் ஒன்று ஏற்பட்டால், வீட்டிலுள்ள பெரியவர்கள், அயலில் உள்ள உறவினர் ஓடி வந்து ஆலோசனை கூறுவார்கள். சிலர் அம்மாள் வருத்தம் என்பர், வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லக் கூடாது என்பர். சில பெற்றோர்கள் இவ்வாறான வார்த்தைகளைத் தேவவாக்காகக் கருதி பிள்ளைகளை கை நழுவ விட்ட சம்பவங்களும் உண்டு.

பெரியவர்களைப் பொறுத்த மட்டில் ஓர் ஆபத்தான நிலை ஏற்பட வேண்டும் என நினைத்துச் சொல்வதில்லை. நல்ல நோக்கம் கொண்டு சொல்லும் போது சில சமயம் அது மாறாக அமைந்து விடுகின்றது. பலரும் பலதைச் சொன்னாலும், அப்பிள்ளையை வைத்தியரிடம் காட்டி அவரின் ஆலோசனையைப் பெறத் தவறக் கூடாது.

வாய் திறந்து சொல்லத் தெரியாத நோயைத் தாங்கும் சக்தி அந்த பால் குடிக்கும் பிள்ளைகள் விடயத்தில் அவர்களுக்கு நோய் அறிகுறி தென்படும் போது பின்பு காட்டுவோம், இப்போது நேரம் இல்லை, பணம் இல்லை என்ற காரணங்களினால் வைத்தியரிடம் நாடுவதை பிற்போடுவது ஆபத்து மிக்கது.

அக்கறையீனமாக இருக்கும் பெற்றோர்களில் சிலர் பிள்ளைகளைப் பலி கொடுத்த பின்பு தான் தமது தவறுகளை உணர்கின்றனர். கண்ணீர் வடிக்கின்றனர். கலங்குகின்றனர், "குத்தி முறிகின்றனர்" இதனால் என்ன பயன்?

விதி என்று சொல்லி தனக்கே தான் சமாதானம் கூறிக்கொள்ள இடம் வைக்கக் கூடாது பிள்ளைகளின் சுகநலத்தில் நூறு வீதம் சரியான முறையில் கவனம் செலுத்த வேண்டியது பெற்றோரின் பொறுப்பு. என் பிள்ளைதானே என்ற தோறணையிலும் பெற்றோர்கள் நடந்து கொள்[illegible]. குழந்தைகள் ச[illegible]த்தின் வாரிசுகள். ★

## நவராத்திரி விழா

வட்டுக்கோட்டை, செப். 27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10மணிமுதல் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விசேட பூசை, வழிபாடுகளைத் தொடர்ந்து இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ-12)

## சுழிபுரம் வீதி திருத்தம்

வட்டுக்கோட்டை, செப். 27

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் சுழிபுரம் காளுவன் சந்தியிலிருந்து சுழிபுரம் மேற்கு இறாந்தலடி வரையான வீதியும் அராலி மத்தி உலோவசிட்டி பிள்ளையார் கோயில் வீதியும் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. இருவீதிகளும் திருத்தம் செய்யும் ஒப்பந்தப் பணி [illegible] மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (ஐ-12)

---

அளவெட்டி
## தாமர் வளவு வைரவர் ஆலய
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
**பிற்போடப்பட்டுள்ளது**

27-09-98 இல் நடைபெறவிருந்த மேற்படி சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— ஆலய தர்மகர்த்தாக்கள் சபை

(59453)

---

## நீங்காத நினைவினிலே 31 ஆம் நாளும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
11 — 11 — 1939

மறைவு
28 — 08 — 1998

அமரர்
## பொன்னையா தியாகராஜா
(சாலைப் பரிசோதகர், இ.போ.ச பருத்தித்துறை.)

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட திருவிளக்கே
மாதம் ஒன்று சென்றதையா - ஆனால்
மாறவில்லை எம்துயரம்
பொறுமையின் உறைவிடமாய்
நேர்மையின் புகலிடமாய்
புன்னகையின் மன்னனாய்
பூமிதன்னில் வலம் வந்தீர்.
கண்டவரைக் கவர்ந்திடும்
எழில் கொண்ட உம்வதனம்
காலன் அவன் கவர்ந்திட்ட
காரணத்தை யாரறிவார்?
ஆலமரம் போலானீர் - அதில்
ஆயிரம் பேர் இளைப்பாற
காலன் அவன் பொறுக்காமல்
கவர்ந்தானோ உம்முயிரை?
கூடு ஒன்றைக் கட்டினீர்
குஞ்சு ஏழைப் பெற்றிட்டீர்
அவனியில் நாம் வாழ
அன்புடனே உழைத்திட்டீர்
அன்பென்னும் சங்கிலியால்
அனைவரையும் கட்டிவைத்தீர்
ஒவ்வொன்றும் உம் பெயரை
ஊரெங்கும் பறை சாற்ற
ஒன்று மட்டும் ஓரம்கட்டி
நின்றகதை அறிவீரோ?
கூட்டை உடைத்துக் கொண்டு
குருவி ஒன்று பறந்ததையா
பறந்த கதை கேட்குமுன்னே
பார் உலகை விட்டகன்றீர்!
வாழ்க்கைப் பாதையிலே
வழி காட்டி நின்றவரே
செய்வது அறியாது
திகைக்கின்றோம் நாம் இங்கு?
இனி யாரை "அப்பா" என்று
அவனியில் நாம் அழைப்போம்?
உமது அன்பு மொழிதனைத்தான்
நாம் இனி எங்கு கேட்போம்?
எம்மை விட்டுப் பிரிந்தது
உம் உயிர் மட்டும் தான்
உம் நினைவு ஒரு போதும்
எம்மை விட்டுப் பிரியாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடியைப் பிரார்த்திக்கின்றோம்.

28-08-1998 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த திருமிகு பொன்னையா தியாகராஜா அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் இன்னும் பலவழிகளில் உதவி புரிந்த சக உத்தியோகத்தர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25-09-1998 காலை 7 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்த தலத்தில் நடைபெற்றன.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 27-09-1998 ஞாயிறு காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அவற்றிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

அமரரின் குடும்பத்தினர்.

புஸ்பா ஸ்ரோர்ஸ்,
இல. 192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(59461)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் மரணம்

யாழ்பபாணம், செப். 27
வல்லை வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற லொறி—சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான, தம்பாலையைச் சேர்ந்த பாலர் திருமேனி (வயது 55) என்பவரே மரணமானவராவார்.

அச்சுவேலிப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இச்சடலம், மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரிபிரேத அறையில் வைக்கப்பட்டது. [இ-15]

## சீரடி......

(மூன்றாம் பக்கத் தொடர்)
களில் அவர் ''நான் சீரடியிலும் எல்லா இடங்களிலும் வசிக்கிறேன்; நான் கடவுள்; நான் உருவமற்றவன்; எங்கும் உள்ளவன்; நான் எல்லாவற்றுள்ளும் அவற்றைக் கடந்தும் இருக்கின்றேன்; ஆகாயம் முழுவதும் நானே நிரம்பியுள்ளேன். நீங்கள் பார்க்கும் எல்லாப் பொருள்களும் ஒன்று சேர்ந்ததே நான். நான் அசைவதில்லை; பிரபஞ்சம் முழுவதும் என்னுள் இருக்கின்றது'' என்று கூறியுள்ளார்.

குருபூர்ணிமா தினமொன்றில் ம்கல்கார் என்பவரை ''குருபூசை செய்'' என்று பாபா கூறினார்;

கேல்கார் பாபாவிடம் சுவாமி ''நான் பிரம்மாவுக்கா, விஷ்ணுவுக்கா, மகேஸ்வரனுக்கா பூசை செய்வது?'' என்று கேட்க—

பாபா ''ஏ, சைத்தான் இங்கேயே இவை யாவற்றையும் அடக்கிக் கொண்டுள்ள நான் இருப்பது தெரியவில்லையா?'' என்று கேட்டார்.

அப்போது தான் எல்லோர்க்கும் சீரடி பாபா சாட்சாத் பரமேஸ்வரனே என்ற உண்மை விளங்கியது;

சீரடி பாபா சமாதி அடையமுன், ''எனக்கு சீடர் எவரும் கிடையாது. எல்லோரும் எனது பக்தர்களே; நான் மீண்டும் ஆறு ஆண்டுகள் கழித்து தரிசனம் தருவேன்'' என்று அப்துல்லா என்ற பக்தருக்கு கூறினார். இதுவே இன்று எம்முன மனிதனாக நடமாடும் சத்திய சாயி பகவான் என்பதை அகில உலகமுமே அவரடி பணிந்து நிற்பதை நாம் கண்ணூடாகக் காணக் கூடியதாக உள்ளது; ★

### திடீரென ஏதோ சத்தம் கேட்டது

# மாடியில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் தரையில் இருந்து எழ முயன்றார்

## மரண விசாரணையில் சிப்பாய் சாட்சியம்

யாழ்ப்பாணம் செப். 27
நான் கடமையில் இருந்த போது பிற்பகல் 4.30 மணியளவில் ஒரு சத்தம் கேட்டது; நான் திரும்பிப் பார்த்தேன்; அப்போது தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்கையையூன்றிஎழுவதற்கு முயன்று கொண்டிருந்தார். அதன் பின் நான் அவ்விடத்துக்கு ஓடிச் சென்றேன். அப்பொழுது அவருக்கு காயமெதுவும் இருக்கவில்லை.

இராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் மாடியில் இருந்து வீழ்ந்து மரணமானதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞா. அன்ரன் குணசேகரம் (வயது 26)என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த பியதாச சேபிரியந்த ராஜ ரூண [வயது22] எனற சிபபாய் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ ஏகநாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த மரண விசாரணை நடைபெற்றது. இராணுவச் சிப்பாய் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

கடந்த 10ஆம் திகதி நான் திருநெலவேலி இராணுவ முகாமில் கடமையில் இருந்தேன். அன்று எனக்கு அளிக்கப்பட்ட பணி முகாம் பாதுகாப்பு. எனது கடமை நேரம் பிற்பகல் 3மணி முதல் 6-30 மணிவரையாகும். நான் கடமையில் இருந்த போது சந்தேக நபாகள் (கப்டன் றொனி பத்தலோமியஸ், லெப்டினன்ட் டிக்சன் ராஜமனதிரி) பிற்பகல் 3 மணியளவில் எனனிடம் வந்து நான் கடமையில் இருநத கட்டடத்துக்குப் பினனால் அமைந்திருந்த மாடிக் கட்டடத்தின் மேல் மாடியில் ஓர் அறையில் இளைஞர் ஒருவர் இருப்பதாகவும் அவரைப் பார்த்துக் கொள்ளுமாறும் கூறி விட்டுச் சென்றார்கள்.

நான் கடமையில் இருந்த இடத்தில் இருந்து சுமார் 5 மீற்றர் தொலைவில் அந்தக் கட்டடம் அமைந்துள்ளது. அதன் மேல் மாடியில் உள்ள அறையை நான் அறிவேன். அந்த அறைக்கு ஒரு கதவு இருக்கிறது.

பிற்பகல் 3 மணிக்கு அந்த சந்தேக நபர்கள் குறித்த கடமையை என்னிடம் பாரம் தந்த போது கதவு திறந்திருந்தது. அப்போது அந்த இளைஞர் (அன்ரன் குணசேகரம்) அறையின் நடுப் பகுதியில் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு இராணுவ அதிகாரிகள் எவரும் இருக்கவில்லை. எனக்கு தமிழ் தெரியாதபடியால் நான் அவருடன் கதைக்கவில்லை.

பிற்பகல் 4-30 மணியளவில் 2 சத்தங்கள் கேட்டன. அந்த இளைஞர் தரையில் கிடந்து எழுவதற்கு முயற்சிசெய்து கொண்டிருந்தார். அவரை எழுப்பி அவரது அறையில் கொண்டு சென்றுவிட்டேன்.

பிற்பகல் 6 மணிக்கு சந்தேக நபர்கள் திரும்பி வந்த போது அவர்களிடம் அது பற்றி அறிவித்தேன். தவிர அதற்கு முன்னர் நான் எவருக்கும் இது பற்றி அறிவிக்கவில்லை. பின்னர் சந்தேக நபர்கள் மேலே சென்று அவரைப் பார்த்தார்கள். அவர்கள் அவருடன் கதைத்தும் பார்த்தார்கள். அவர் கதைக்கவில்லை. உறங்கிக் கொண்டிருந்தார். நான் பின்னர் அவருக்கு சாப்பாடு எடுத்து வந்து கொடுத்தேன். அவர் சாப்பாடு வேண்டாம் என்று கூறினார். நான் சாப்பாடு எடுக்கச் சென்ற சமயம் சிப்பாய் லக்ஸ்ஸ்ரீ அவரைப் பார்த்துக் கொணடார்.

பின்னர் அவரை ஒரு மணித்தியாலத்திற்கு ஒருமுறையே சென்று பார்த்துவிட்டு வந்தோம். அச்சமயம் சந்தேக நபர்கள் அவ்விடத்துக்கு வரவில்லை.

அவர்கள் காலை 6-30 மணியளவில் வந்து அவரைப் பார்வையிட உள்ளே சென்றார்கள். கப்டன் பத்தலோமியஸ் தமிழ் தெரிந்தவர். எனவே அவருடன் கதைத்துப் பார்த்தார் பதில் வரவில்லை. அப்போது கப்டன் அவன் நல்ல நித்திரை கொண்டு கொண்டிருக்கிறான் என்று கூறினார். பின்னர் ஏதும் நோய்வாய்ப் பட்டிருக்கலாம் எனக் கருதி வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டும என்று கூறினார். அந்த நேரம் அவர் இறந்திருந்தாரா என்று எனக்குத் தெரியாது. அவ்விடத்தில் சிகிச்சை அளிக்க ஒரு வைத்தியர் இருக்கிறார். அந்த வைத்தியர் தகுதி பெற்ற வைத்தியரல்லர்.

இறந்த அந்த நபர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது பற்றியோ மரண விசாரணையில் அடிகாயம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அது எப்படி வந்தது என்பது பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது அன்று பிற்பகல் 3 மணியில் இருந்து அடுத்த நாள் காலை சந்தேக நபர்கள் அவ்விடத்துக்கு வரும் வரை அவர் எனது பொறுப்பிலும் லக்ஸ்ஸ்ரீயின் பொறுப்பிலும் இருந்தார்—என்று தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த நீதிவான்சந்தேகநபர்களை எதிர் வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-6)

## புடைவை மலிவு விற்பனை

தென்மராட்சி, செப். 27
தீபாவளித்திருநாளை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புடைவை விற்பனை நிலையத்தில் மலிவு விலையில் புடைவைகள் விற்பனை செய்யப்படுகிறன. மக்கள் தமக்குத் தேவையான புடைவை வகைகளை கொள்வனவு செய்வதைக் காண முடிகிறது. (ஐ-117)

## வாழைப்பழம் வாங்கிய இருவர் கைது

மட்டக்களப்பு, செப். 27
மட்டக்களப்பு ஏறாவூர் சந்தையில் வாழைப்பழம் கொள்வனவு செய்த இரு தமிழ் வாலிபர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சித்தாண்டி வாசிகளான இந்த இருவரும் விடுதலைப் புலிகளுக்கு வாழைப்பழம் கொள்வனவு செய்ததாக பொலீஸார் கூறுகின்றனர்.

திலீபன் நினைவு தின வைபவத்துக்காகவே இவர்கள் வாழைப்பழம் கொள்வனவு செய்தார்கள் என்றும் கூறப்பட்டது. (இ-21)

# சரண் அடைந்த பெண் விடுவிக்கப்பட்டாராம்

## படையினர் தரப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 27
முன்னர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்ததாகக் கூறப்படும் பெண் ஒருவர் தம்மிடம் நேற்று முன்தினம் சரண் அடைந்ததாகவும் —

விசாரணைகளின் பின்னர் சாதாரண வாழ்க்கைநடத்துவதற்கு படையினர் அவரை அனுமதித்து விடுவித்திருப்பதாகவும் — பருத்தித்துறை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கரவெட்டியைச்சேர்ந்த யோகேஸ்வரன் இன்பராணி (வயது 19) என்பவரே அந்தப் பெண் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# விசர்நாய் கடித்தவர் 2 மாதத்தின் பின் மரணம்

யாழ்ப்பாணம், செப். 27
விசர்நாய்க் கடிக்கு உள்ளான ஒருவர் நேற்று மரணமானார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான ஆர். பிரேம்குமார் (வயது 32) என்பவரே மரணமானவர் ஆவார்.

இரு மாதங்களுக்கு முன் கடற்றொழிலுக்காகச் சென்று கரை ஓரத்தில் படுத்திருந்த சமயம் அங்கு வந்த நாய் ஒன்று அவரைக் கடித்ததாகவும்—

அதற்கு அவர் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி மருந்தைப் போடாது ஏற்பூசியை மட்டும் போட்டிருந்தார் என்றும்

கடந்த வாரம் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக —விசர்நாய்க்கடி நோய்க்கான ஆரம்ப அறிகுறி தெரிந்ததும், கடந்த 22 ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 5 ஆம் நாள் அதாவது நேற்று அவர் மரணமானார். (இ-15)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில் 11 — 03 — 1939



விண்ணில் 29 — 08 — 1998

### அமரர் சிவசம்பு சரவணபவானந்தன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், வவுனியா மகா வித்தியாலயம்)

சபிண்டீகரணமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை [28-09-98] திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

227, கோயில் வீதி, நல்லூர். மனைவி, மக்கள் (59464)


# யாழ்ப்பாணக்கல்லூரி நூலகத்தில் பாரதியாரின் நூல்களுக்கு தனிப்பிரிவு

## பேராயர் ஜெபநேசன் தகவல்

வலி. தென்மேற்கு, செப். 27
இந்த நூற்றாண்டின் மாமனிதர் மகாகவி பாரதி ஆவார். மகாகவி பாரதியின் இலட்சியங்களுக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியின் இலட்சியங்களுக்கும் அதிகளவில் வேற்றுமைகள் இல்லை.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி அதி வண. எஸ். ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் ஜி. இராஜநாயகம் தலைமையில் 'பாரதி விழா' நடைபெற்றது. இவ் விழாவில் [illegible] பேராயர் ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலையத்திற்கு எம்மிடம் உள்ள பாரதி பற்றிய நூல்களையெல்லாம் சேகரித்து டனிபில்புவர் நூலகத்தில் மகாகவி பாரதியின் தனி நூலகப் பிரிவு ஒன்றை உருவாக்க உள்ளோம். பெண் விடுதலை, மூடநம்பிக்கைகள் ஒழிப்பு, சாதித்துவேஷங்களை அகற்றுதல், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி வழங்குதல், இறை நம்பிக்கையை வளர்த்தல் என்பவற்றில் பாரதியோடு ஒத்துப் போகும் விதத்தில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பரிபூரண உடன்பாடு உண்டு. பாரதி நூல்களைப் படிப்பதும், படிப்பிப்பதும் இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்கு நாம் செய்யக் கூடிய பெருந்தொண்டு ஆகும். தனது இலட்சியங்கள் நிறைவேறுவதை காணாமலேயே பாரதி மறைந்து விட்டார். ஆனால் அவருடைய உயர்ந்த நோக்கங்களை மாணவர்களுடைய உள்ளத்தில் பதியும்படி செய்தல் வளர்ந்தவர்களின் கடமையாகும். பாரதியை நான் நேரிலே பார்க்காவிட்டாலும், அவருடைய பேர்த்தியார் பேசிய கூட்டமொன்றிற்கு நான் தலைமை வகித்தேன். பாரதி வாழ்ந்த எட்டயபுரம் வீட்டையும், திருவல்லிக்கேணி வீட்டையும் சென்று பார்த்தேன்— என்று பேராயர் மேலும் தெரிவித்தார்.

இவ் விழாவில் கலை நிகழ்ச்சிகளும், வில்லுப்பாட்டும் இடம்பெற்றன.

விழாவில் கல்லூரியின் இணை அதிபர்களான செல்வி எஸ். பி. குலசிங்கம், வண. பிதா ஏ. ஏ. போல் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், யுவதிகள் கடத்தல், சித்திரவதை

## தெற்கில் இயங்கும் குழு

கொழும்பு, செப். 27

இளைஞர்களையும், யுவதிகளையும் கடத்திச் சென்று சித்திரவதை செய்து அவர்களின் உடல்களை எரிக்கும் குழு ஒன்று நாட்டில் செயற்பட்டு வருவதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

திடீர், திடீரென இளைஞர்களும், யுவதிகளும் காணாமற்போவதாக பொலீஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

இதற்கிடையில் கொன்ற பின்னர் கொழுத்தப்பட்ட அல்லது உயிருடன் கொழுத்தப்பட்ட உடல்களின் பாகங்கள் நாட்டின் சில பகுதிகளில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுமார் 2 வாரங்களுக்கு முன் நுவரெலியா நீர் வீழ்ச்சிக்கு அருகே காணப்பட்ட யுவதியின் உடல் இது வரை அடையாளம் காணப்படவில்லை.

3 வாரங்களுக்கு முன்னரும் நுவரெலியாப் பகுதியில் சுட்டெரிக்கப்பட்ட நிலையில் மற்றொரு உடல் காணப்பட்டது. (இ-10-7)

# ஜேர்மனியிலுள்ள மாநகர சபைகளுக்கு யாழ். மாநகர ஆணையாளர் செல்வார்

யாழ்ப்பாணம், செப். 27

தற்பொழுது ஜேர்மனியில் உள்ள யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் ஜேர்மனியில் உள்ள மாநகர சபைகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனமான ஜி. ரி. இஸட். இதற்கான ஏற்படுகளைச் செய்து கொடுத்துள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் இம் மாதம் 29 ஆம் திகதி முதல் 5 நாள்களுக்கு ஜேர்மனியில் உள்ள மாநகர சபைகளுக்கு விஜயம் செய்து அவற்றின் செயற்பாடுகள் குறித்து அறிந்துகொள்வார்.

அனேகமாக ஒக்ரோபர் 12 ஆம் திகதி அவர் இலங்கை திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)


ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

A\L 99

PAPER CLASS

கணித உயிரியல் பிரிவுகள்

பௌதிகவியல் — திரு. குமரன்
இரசாயனவியல் — திரு. சிவத்திரன்
தூய / பிரயோக — திரு. ரவீந்திரன்
விலங்கியல் — திரு. கெங்காதரன்
தாவரவியல் — திரு. தயாபரன்

ஆரம்பம்: 28-9-98 (திங்கள்) 6. 30 (a.m.)

குறிப்பு: A/L 98 பரீட்சைக்குத் தோற்றிய வணிகப் பிரிவு மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் (Day Class) ஆரம்பமாகிவிட்டன.

நிர்வாகி.

(59462)



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

28-09-1998 முதல்

காவேரி சில்க்ஸ்

ஸ்தாபனத்தாரின்

வருடாந்த

மாபெரும் தள்ளுபடி விற்பனை

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூரில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட

★ சாறிவகைகள் ★ சேட்டிங் ★ சூட்டிங் ★ மற்றும் துணிவகைகள்

அனைத்தையும் உங்கள் எண்ணம் போல தெரிவு செய்து விசேட தள்ளுபடி விலையில் பெற்றுக்கொள்ள

காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(59415)


# அ'புரம் நீதிமன்றில் உரிய தவணை; ஆஜராகத் தவறுவோர் கைது

## யாழ். நீதித்துறை வட்டாரங்களில் விசனம்

யாழ்ப்பாணம், செப். 27

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் நீதிமன்றில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்கள் குறித்த தவணையில் அனுராதபுரம் நீதிமன்றில் சமுகமளிக்காத போது அவர்கள் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு பொலீஸாரால் அவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவது தொடர்பாக யாழ். நீதித்துறை வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுபவர்கள் யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்று இல்லாமையால் அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்குக் கொண்டு சென்று ஆஜராப்படுத்தப்படுகின்றனர்.

இவர்களது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது இவர்களில் சிலர் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அவர்கள் வழக்கு முடியும் வரை அங்கு தங்கியிருக்கமுடியாததால் மீண்டும் யாழ்ப்பாணம் வந்துசேர்கிறார்கள்.

ஆனால் அடுத்த தவணை வழக்குக்காக அனுராதபுரம் செல்வதற்கு இவர்களுக்குப் போக்குவரத்துப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் இருப்பதனால் இவர்களில் சிலர் அடுத்த தவணைக்கு நீதிமன்றில் சமுகமளிக்க முடியாமல் போய் விடுகிறது.

நீதி மன்றல் சமுகமளிக்க முடியாத காரணத்தால் இவர்கள் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு இவர்கள் இங்கு வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

அண்மைக்காலங்களில் இவ்வாறு கைது செய்யப்பட்ட பல பொலீஸாரால் யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் அனுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பப்படும் சம்பவங்கள் அதிகரிந்து வருகின்றன. (இ-9)

# டாக்டர் ஜயலத்தை மடு செல்ல அனுமதிக்குமாறு கோரிக்கை

## பாதுகாப்பு செயலருக்கு கடிதம்

கொழும்பு, செப். 27

ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத்ஜெயவர்த்தனாவை மடுவுக்கு செல்ல அனுமதிக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் பாதுகாப்பு அமைச்சு செயலாளரை கேட்டுள்ளார்.

வன்னி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் என்ற ரீதியில் இது தொடர்பான கடிதமொன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

முன்னதாக டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, வன்னி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் த. சித்தார்த்தனுக்குஎழுதிய கடிதத்தில், மடு தேவாலய தண்ணீர் தாங்கியை திருத்தி அமைக்கும் தமது யோசனைகளுக்கு வன்னி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அங்கீகாரம் அளித்து இதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இந்த வேலைகளை நேரடியாக சென்று மதிப்பிட தாம் மடு செல்ல பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரியதாகவும்—

ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்றும்— அவர் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்தே பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கடிதம் எழுதி, டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவை மடு செல்ல அனுமதிக்குமாறு கோரி உள்ளார். (இ-21)

# 66 ஏ,பி முத்திரைக்கான உலர் உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 27

66ஏ,பி முத்திரைப் புள்ளிக்கான உலர் உணவு நிவாரணத்தை உடனடியாகவழங்குமாறு யாழ். அரச அதிபர் கொழும்பிலிருந்து யாழ். செயலக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த இரு மாதங்கள் உலர் உணவு நிவாரணம் வெட்டப்பட்டவர்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

உணவு முத்திரைப் புள்ளி இல்லாதவர்களுக்கு அனுமதிப் பத்திரம் மூலம் இந்த நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிவாரணத்தைப் பெறும் அனைத்துக் குடும்பங்களுக்கும் சிவப்பு நாட்டரிசி வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்)

போனோரின் குடும்பத்தவர்களிடம் இருந்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

வாக்கு மூலங்களைப் பதிவு செய்த பின் அவற்றை அடிப்படையாக வைத்தே அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு ஐ நா. நிபுணத்துவ உதவியை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியது தெரிந்ததே.

பாதுகாப்பு மற்றும் பிரச்சினைகளைக் காரணம் காட்டி ஐ. நா. நிபுணத்துவ உதவி பெறப்படுவதில் சிரமங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை வெளிவிவகார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இலங்கை அரசு உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் ஐ. நா. நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்து தமதுபணியை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-6)

# மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர் கைது

கொழும்பு, செப், 27

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மொறட்டுவ, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 4 மாணவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாணவர்களை விசாரிப்பதற்கென மொறட்டுவ பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸ் குழுவினர் பல்கலைக் கழகத்திற்குச் சென்றனர் எனவும்—

ஆனால் மாணவர்களை விசாரிப்பதற்கு பொலீஸாருக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும்—

இதனை அடுத்து பொலீஸார் மேற்படி மாணவர்கள் தங்கியிருந்த இடங்களுக்குச் சென்று விசாரித்த போது அந்த மாணவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டத் தவறிவிட்டனர் எனவும்—

மொறட்டுவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த அத்தபத்து தெரிவித்தார். (இ-7)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27- 09- 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org